மலரும் உள்ளம்

இரண்டாம் தொகுதி

குழந்தைக் கவிஞர்



மலரும் உள்ளம்

இரண்டாம் தொகுதி

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

மலர்என உள்ளம் - நமக்கு
மலர வேண்டுமடி

பாரி நிலையம்
184, பிராட்வே
சென்னை-600108

மலரும் உள்ளம்

இரண்டாம் தொகுதி

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

ஓவியர்கள் :
ஸாகர்
ரானு

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, *பிராட்வே, சென்னை - 108.*

MALARUM ULLAM - PART - II

(Poems for Children)

Author	:	AL. Valliappa
Illustrators	:	Sagar & Ranu
Publisher	:	Kulandai Puthaka Nilayam, Madras - 40.
Sole Distributors	:	Paari Nilayam, Madras - 108
Printer	:	Sunanda Printers, Madras - 41
Fifth Edition	:	April 1996
Price	:	Rs. 40

விலை நாற்பது ரூபாய்

இப்புத்தகத்திலுள்ள பாடல்களை மாணவ மாணவிகள் பள்ளிக்கூடங்களிலும், பொது மேடைகளிலும் பயன்படுத்தலாம். ஆசிரியரின் அனுமதி தேவையில்லை.

இப்பாடல்களைப் பள்ளிப் பாடப் புத்தகங்களிலும், மற்றப் புத்தகங்களிலும் சேர்க்க விரும்புவோர் ஆசிரியரின் அனுமதி பெறவேண்டும்.
பதிப்புரிமை : ஆசிரியருடையது.

வெளியிட்டோர் :
குழந்தைப் புத்தக நிலையம்
சென்னை - 40

கலையெலாம் பெற்ற தாயே,
    கற்பவர் போற்றும் தாயே,
உலகிலே நிலைத்த செல்வம்
    உன்னருட் செல்வ மன்றோ?
பலகலை பயில வேண்டிப்
    பணிவுடன் வேண்டுகின்றேன்:
மலரினில் விளங்கும் நீஎன்
    மனத்திலும் விளங்கு வாயே!

காணிக்கை

சின்னஞ் சிறுவருக்குத்
        தேன்கவிகள் தந்தவராம்,
என்போல் இளைஞர்களை
        இத்துறைக்கே ஈர்த்தவராம்,
என்றன்மனக் கோவிலிலே
        எந்நாளும் உறைபவராம்,
அன்புக் கவிமணிக்கே
        ஆசையுடன் படைக்கின்றேன்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின்

அணிந்துரை

'மலரும் உள்ளம்' இரண்டாம் தொகுதி ஒரு நாள் என் கைக்கு வந்தது. காரணம் அறியாமல் படிக்கத் தொடங்கிக் குழந்தை போல் மகிழ்ந்து கொண்டிருந்தேன். திரு. அழ. வள்ளியப்பாவின் கடிதம் என் கைக்கு வந்தது. அதில் அணிந்துரை வேண்டும் என்று குறித்திருந்தார். எனக்கு வியப்பாக இருந்தது. தொடர்ந்து பல ஆண்டுகளாகக் குழந்தை இலக்கிய உலகத்தில் நன்கு அறிமுகமாகிப் புகழுடன் விளங்கி வரும் கவிஞர், ஏன் இப்படி அணிந்துரை கேட்கிறார் என்று எண்ணினேன். நாடறிந்த இவருக்கு ஓர் உரையும் தேவை இல்லை. எனினும், நானும் இந்த நூலைப் படித்தேன் என்பதற்குச் சான்றாக இதனை எழுதுகிறேன்.

பெரியவர்களின் இலக்கியத்தைக் குழந்தைகள் படிக்க முடியாது. ஆனால், குழந்தைகள் இலக்கியத்தைப் பெரியவர்களும் படிக்க முடியும். என்ன காரணம்? அந்தக் குழந்தை மனம், பெரியவர்களான பிறகும் விட்டு நீங்குவது இல்லை. விரும்பிய போதெல்லாம் அது, திரும்பி வருகிறது. உடல் மூத்து விட்டால், அதற்கு இளமை திரும்ப வருவதில்லை. ஆனால், உள்ளத்திற்கு மூப்பின் அனுபவம் நிரம்பிய போதிலும், இளமை உணர்ச்சிகள் திரும்பத் திரும்ப வருகின்றன.

குழந்தை உலகம், கவலை குறைந்த உலகம். இயற்கையோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு அங்கு மிகுதி. 'நத்தையம்மா' என்ற பாட்டில், நத்தையோடு பேசும் குழந்தை அந்த உண்மையைப் புலப்படுத்துகிறது.

அத்தை குளிக்கத் தண்ணீர்க் குடம்
கொண்டு போகிறேன்

என்று நத்தை சொல்வதும்,

எத்தனை நாள் ஆகும் அத்தை
வீடு செல்லவே?

என்று குழந்தை கேட்பதும்,

பத்தே நாள்தான்; வேணு மானால்
பார்த்துக் கொண்டிரு

என்று நத்தை விடையளிப்பதும் மகிழ்ச்சி தரும் கற்பனையாகும். இப்படிப்பட்ட சின்னஞ்சிறு பொருள்களிலும் கரவு இல்லாமல் கலந்து உணரும் உள்ளம் கவிஞர்க்கும் குழந்தைகளுக்கும் வாய்த்த செல்வமாகும்.

இயற்கைப் பொருள்களை மட்டும் அல்லாமல், செயற்கைப் பொருள்களையும் குழந்தைகள் காணும் காட்சியே தனிப்பட்டதாகும். விமானத்தைப் பற்றிக் குழந்தை கூறுவதைக் கேட்கலாம்.

மனிதர் தம்மைத் தூக்கிக் கொண்டு
வானத்திலே பறக்குது;
வயிற்றுக் குள்ளே பத்திரமாய்
வைத்துக் கொண்டே செல்லுது.

விமானங்களும், மோட்டார்களும், கப்பல்களும் பெருகிய இந்தக் காலத்திலும், குழந்தைகளுக்கு யானையிடத்தில், தீராத ஆசை உண்டு. யானை வாங்கி அதன் மேல் ஏறி எல்லா இடங்களிலும் சுற்றிவர வேண்டும் என்று கூறுகிறது குழந்தை.

வளரும் குழந்தை தன்னைச் சுற்றியுள்ள பெரியவர்களைப் பார்த்து, எதிர்காலத்தில் டாக்டராக, வாத்தியாராக, வக்கீலாக, நடிகனாக, சிப்பாயாக, போலீசாக ஆக வேண்டும் என்று கனவு காண்பதை 'நானாக இருந்தால்.....?' என்னும் பாடல் உணர்த்துகிறது.

‘வீடு கட்டுவோம்’, என்ற பாட்டு, இக்காலத்து வீடுகளை எள்ளி நகையாடுவதாக அமைந்துள்ளது.

கதவு வேண்டாம், சன்னல் வேண்டாம்
கம்பி வேண்டாம் தம்பி - உள்ளே
கள்வர் எவரும் நுழைய மாட்டார்
கவலை வேண்டாம் தம்பி.

சாவி வேண்டாம், பூட்டும் வேண்டாம்
தாழும் வேண்டாம் தம்பி - நம்
சர்க்கா ருக்கு வீட்டு வரியும்
தரவே வேண்டாம் தம்பி.

குழந்தைகள், நாம் கட்டும் வீடுகளைப் பற்றி எண்ணும் எண்ணம் நன்றாகவே இருக்கிறது. ஆனால், குழந்தைகளால் கற்பனை உலகத்தில் நெடுநேரம் வாழ முடியும். நம்மால் முடியுமா?

கீழே விழுந்த இறகு ஒன்றைச் சிறுவன் ஒருவன் குழந்தை மனத்தோடு பார்க்கிறான். அதன் அழகை வியந்து போற்றுகிறான். அதற்கு உரிமை உடைய பறவையைத் தேடுகிறான். இப்படி அமைந்தது ‘இறகு’ என்னும் பாட்டு.

ஆமை முதுகு ஓடு, வீடாகக் காட்சி தருகிறது ‘அதிசய வீடு’ என்னும் பாடலில். மின்மினி கறுத்த வானத்தில் சின்னஞ் சிறு விளக்காகத் தோன்றுகிறது. இவ்வாறு ‘நிலா’, ‘பிறைச் சந்திரன்’, ‘தும்பி’ முதலியவை பற்றிய பாடல்கள் கற்பனைச் சுவையோடு உள்ளன.

சிறுவர், குழந்தையுள்ளத்து உணர்ச்சிகளின் தொடர்பு வைத்துக் கொண்டே, வளர்ந்த பெரியவர்களின் உலகத்தையும் காண்பவர். ஆகையால், நடன அரங்கத்தில் ஆடும் நாட்டியக் காரியைப் பார்த்த கண்களோடு மயிலின் நடனத்தையும் பார்க்கும் சிறுவர்க்குச் சில வேறுபாடுகள் நன்றாகத் தெரிகின்றன.

நட்டுவனார் இல்லாமலே
ஆடும் மயில் இது.

பயிற்சி ஏதும் இல்லாமலே
ஆடும் மயில் இது - பின்
பாட்டு யாரும் பாடிடாமல்
ஆடும் மயில் இது.

காலில் ஏதும் சலங்கையின்றி
ஆடும் மயில் இது - இரு
கண்ணில் மையும் தீட்டிடாமல்
ஆடும் மயில் இது.

சிறுவர்க்கு அறிவூட்டும் பாடல்களாகவும் இதில் சில அமைந்துள்ளன. 'பார்த்துப்போ தம்பி', 'எங்கள் பள்ளி', 'முப்பெரும் புலவர்', 'ஔவைப் பாட்டி', 'பலன்', 'காந்தி வழி' முதலான பாடல்கள் அப்படிப்பட்டவை.

கதைப்பாடல்கள் என்ற பகுதியும் அவ்வாறு பயன்படும் பாடல்களைக் கொண்டதே ஆகும். அப்பாடல்கள், பல நல்ல உண்மைகளையும் நீதிகளையும் சிறுவர்க்கு உணர்த்துவன ஆகும்.

வேடிக்கைப் பாடல்கள் என்ற பகுதியில், 'வினோத விடைகள்', 'இருபது பேர்கள்' என்பவை மிக்க மகிழ்ச்சி தருவன.

இவ்வாறு நல்ல கற்பனையும், சிறந்த உணர்ச்சிகளும், உயர்ந்த நோக்கங்களும் குழந்தைகளின் மனத்தில் பதியுமாறு பல பாடல்களைப் பாடித் தொகுத்துத் தந்துள்ளார் குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா. அவருடைய தொண்டுக்குத் தமிழ்நாடு என்றும் நல்ல வரவேற்பும், பாராட்டும் தரும் என்பது உறுதி. வாழ்க அவர்தம் குழந்தை இலக்கியங்கள்!

- மு. வரதராசன்

ஆசிரியர் முன்னுரை

அன்று ஞாயிற்றுக்கிழமை. எங்கள் வீட்டின் எதிரேயுள்ள மாமரத்தடியில் குழந்தைகள் கூடிப் பேசி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்படி அடிக்கடி அங்கே அவர்கள் கூடுவது வழக்கம்.

அந்தக் குழந்தைகள் கூட்டத்தில் ஒரு சிறுவன் புத்தாடை அணிந்திருந்தான். அவனைப் பார்த்து இன்னொரு சிறுவன், "இன்றைக்கு என்னடா புதுக் கால்சட்டை, புது மேல்சட்டை எல்லாம் போட்டிருக்கிறாய்?" என்று கேட்டான்.

"இன்று என் பிறந்த நாள். அதனால்தான்" ... என்றான், புத்தாடை அணிந்திருந்த சிறுவன்.

"அப்படியானால், நீ ஞாயிற்றுக்கிழமை பிறந்தவன்" என்றாள் ஒரு சிறுமி.

அவர்களது உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்த நான், "இவன் ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை. ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை எப்படி இருக்கும், தெரியுமா?" என்று விளையாட்டாகக் கேட்டேன்.

"எப்படி யிருக்கும்?" என்று பலரும் சேர்த்து ஒரே குரலில் கேட்டனர்.

"ஞாயிற்றுக் கிழமை பிறந்தபிள்ளை
 நன்றாய்ப் பாடம் படித்திடுமாம்"

என்றேன்.

உடனே ஒரு சிறுமி, "அப்படியானால், திங்கட்கிழமை பிறந்த பிள்ளை...?" என்று கேள்வி போட்டாள்.

சற்றுத் தயங்கினேன். பிறகு,

"திங்கட் கிழமை பிறந்தபிள்ளை
 தினமும் உண்மை பேசிடுமாம்"

என்றேன்.

உடனே, "நான் திங்கட்கிழமைதான் பிறந்தேன்", "நான்கூடத் திங்கட்கிழமைதான் பிறந்தேன்" என்று மூன்று, நான்கு குழந்தைகள் கூறினார்கள்.

"சரி, செவ்வாய்க் கிழமை பிறந்த பிள்ளை என்ன செய்யும்?" என்று வேறொரு குழந்தை கேட்டது.

ஒவ்வொரு கிழமையில் பிறந்த பிள்ளையும் எப்படி இருக்குமென நான் கூறிக்கொண்டே வந்தேன்.

சனிக்கிழமை வரை நான் கூறி முடித்ததும், குழந்தைகள் ஒருவரைப் பார்த்து ஒருவர், "நீ எந்தக் கிழமையில் பிறந்தாய்?", "நீ எந்தக் கிழமையில் பிறந்தாய்? "என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு குழந்தை, "வெள்ளிக்கிழமை பிறந்தேன்" என்று சொன்னால், உடனே, "அண்ணா, அவன் வெள்ளிக்கிழமை பிறந்தானாம். அப்படியானால், வேண்டும் உதவிகள் செய்திடுவான். இல்லையா, அண்ணா?" என்று கேட்டார்கள். "புதன்கிழமை", என்றால், "அப்படியானால், பெற்றோர் சொற்படி நடப்பான் இவன்" என்றார்கள்.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நான், "இப்போது உங்கள் ஒவ்வொருவரையும் நான் கேள்வி கேட்கப் போகிறேன். எங்கே, பதில் சொல்லுங்கள். பார்க்கலாம்" என்றேன்.

குழந்தைகள் கேள்வியை ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"நான் ஏழு கிழமைகள் சொன்னேனல்லவா?
இந்தக் கிழமைகள் ஏழுக்குள்
எந்தக் கிழமையில் நீ பிறந்தாய்?"

என்று ஒரு சிறுவனைக் கேட்டேன்.

"செவ்வாய்க் கிழமை நான்பிறந்தேன்
செய்வதை ஒழுங்காய்ச் செய்திடுவேன்"

என்று, நான் சொன்ன முறையிலே எனக்குப் பதிலளித்தான் அந்தச் சிறுவன்! இப்படியே மற்றக் குழந்தைகளும் மகிழ்ச்சியோடு பதில் தந்தனர். அவர்களைக் காட்டிலும் எனக்குத் தான் பன்மடங்கு மகிழ்ச்சி. காரணம், எனக்கு அவர்கள் மூலம் ஒரு பாட்டுக்கிடைத்து விட்டதல்லவா?

இது நடந்து ஒரு வாரங்கூட ஆகவில்லை. ஒரு நாள் என் மகன் என்னிடம் வந்து, "அப்பா, நாலணா வேணும்,

நாளைக்குப் பள்ளிக் கூடத்திலே இராமகிருஷ்ணர் பிறந்த நாள்" என்றான்.

"உண்மையாகவா?" என்று நான் கேட்டுவிட்டேன். உடனே அவன், "என்னப்பா இப்படிக் கேட்கிறாய்? நான் திங்கட்கிழமை பிறந்த பிள்ளை. தினமும் உண்மை பேசிடுவேன்" என்று பெருமையோடு சொன்னான்.

இதைக் கேட்டதும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "அடே, நம் பாட்டு குழந்தைகளின் குணத்தை உருவாக்கவும் உதவும் போலிருக்கிறதே!" என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தேன்.

இந்த நிகழ்ச்சியை நான் கூற முற்பட்டதற்குக் காரணம் வேறொன்றுமல்ல; நான் எழுதியுள்ள பல குழந்தைப் பாடல்கள் குழந்தைகளிடமிருந்தே உருவாயின என்பதை எடுத்துக்காட்டவேதான்.

'குழந்தைகளுடன் நெருங்கிப் பழகும்போது நமக்கும் குழந்தை உள்ளம் உண்டாகிறது. நாமும் குழந்தையாகி விடுகிறோம். அப்போது நம் உள்ளத்தில் தோன்றும் பாடலே குழந்தைப் பாடலாக அமைகிறது' என்று நான் நினைக்கிறேன். குழந்தைகளுக்குப் பாடல் எழுதும் மற்றக் கவிஞர்களுடைய அனுபவமும் இப்படித்தான் இருக்குமெனக் கருது கிறேன்.

மலரும் உள்ளம் - இந்தப் பெயரைப் பார்த்ததுமே கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களின் முகம் மலர்ந்தது. "அழகான பெயர். குழந்தைகள் நூலுக்கு மிகவும் பொருத்தமான பெயர்" என்று மகிழ்ச்சியோடு கூறினார்கள்.

"அழகான பெயர்தான். ஆனால், இந்தப் பெயரை நான் வைக்கவில்லை. ஆர். எம். முத்தையா என்ற என் நண்பர் தான் இப்பெயரிட்டார்" என்றேன்.

"மிகவும் நல்ல பெயர். இது மலர்கின்ற உள்ளங்களுக்காக எழுதப்பட்டதுதானே!" என்று மீண்டும் உரைத்தார்கள்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, 'மலரும் உள்ளம்' என்ற என் முதல் கவிதைத் தொகுதிக்கு வாழ்த்து வழங்கியபோது தான் கவிமணியவர்கள் இவ்வாறு கூறினார்கள். அவர்கள் மனத்திற்குப் பிடித்தமான 'மலரும் உள்ளம்' என்ற பெயரையே இத்தொகுதிக்கும் வைப்பது நல்லதென நண்பர்களும் நானுமாகச் சேர்ந்து முடிவு செய்தோம். முதல் தொகுதிக்குத்

தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர் பலரின் நல்வாழ்த்தும், பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், குழந்தைகள் முதலியோரது பேராதரவும் கிடைத்தன. அவர்களது ஆசியும், அன்பும், ஆதரவுமே இந்த இரண்டாம் தொகுதி வெளிவருவதற்குப் பெரிதும் துணைநின்றன.

சிறந்த சிந்தனையாளராகவும், பண்பட்ட எழுத்தாளராகவும் விளங்கும் டாக்டர். மு. வரதராசனார் அவர்களுக்குக் குழந்தை இலக்கியத் தில் அளவற்ற ஆர்வமும் அக்கறையும் உண்டு. இதை அவர்களது எழுத்திலும் பேச்சிலும் எளிதிலே அறியலாம். அவர்கள் இப்புத்தகத்திற்கு அரியதோர் அணிந்துரை நல்கியதோடு, என் முயற்சிகளுக்கு வாழ்த்தும் கூறியிருக்கிறார்கள். இது நான் பெற்ற பெரும் பேறாகும். அவர்களது பேரன்பை எண்ணி எண்ணி மகிழ்கின்றேன். அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

குழந்தைப் புத்தகம் என்றால் அதில் படங்கள் இல்லாதிருக் கலாமா? படங்கள் இல்லாத குழந்தைப் புத்தகம் மலர்கள் இல்லாத நந்தவனம் போன்றதே. இப்புத்தகம் கவர்ச்சியாய் அமைவதற்குச் சிறந்த முறையில் ஓவியங்கள் வரைந்தவர், தமிழ் நாட்டின் முன்னணி ஓவியர்களில் ஒருவராகிய திரு. ஸாகர் அவர்கள். பாடல்கள் முடியும் இடங்களில் உள்ள சிறுசிறு படங்களை வரைந்தவர், கேலிப் படங்கள் வரைவதில் வல்லவரான திரு. ரானு அவர்கள்.

கல்விச் செல்வம், கேள்விச் செல்வம், பொருட் செல்வம் முதலிய செல்வங்களைக் காட்டிலும் நிறைந்த ஒரு செல்வம் எனக்கு உண்டு. அதுதான் நட்புச் செல்வம். என் இலக்கிய முயற்சிகளுக்கெல்லாம் துணை நின்று, அடிக்கடி எனக்கு உற்சாகமூட்டி, ஊக்கமளித்து வரும் நண்பர்கள் பலர். அவர்களின் நன்முயற்சியால்தான் இப்புத்தகம் வெளிவருகிறது.

கவிமணியவர்களிடம் பல சிறப்பியல்புகள் உண்டு. அவற்றுள் ஒன்று என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அவர்கள் எதை எழுதினாலும் அதைத் தம் நண்பர்களிடம் காட்டி அவர்கள் நன்றாயிருக் கிறது என்று சொன்னால்தான், அச்சுக்கு அனுப்புவார்கள். 'இப்படி யிருந்தால் நன்றாயிருக்குமே' என்று ஒருவர் ஒரு மாற்றம் சொன்னால், இதை அவர்கள் ஆர்வமுடன் கேட்பார்கள். அந்த யோசனை நல்லதா யிருப்பின், தக்க மாற்றம் செய்யச் சற்றும் தயங்கமாட்டார்கள். கவிமணி யவர்களின் இத்தகைய தன்னடக்கத்தைக் கண்டு நான் பெரிதும்

வியந்தேன். இதில் அவர்களைப் பின் பற்றுவது நலமென உணர்ந்தேன் அச்சுக்குக் கொடுப்பதற்கு முன்பு என் பாடல்களில் ஐந்து பிரதிகள் எடுத்தேன். நண்பர்கள் சிலரிடம் கொடுத்துப் படித்துப் பார்த்துத் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டேன். கவிஞர் சோமு, புலவர் தணிகை உலகநாதன், கவிஞர் தமிழழகன், புலவர் அ. அப்துல் கரீம், தம்பி சீனிவாசன் முதலியவர்கள் தங்களது பல வேலைகளுக்கிடையே இப்பாடல்களைப் படித்துப் பார்த்து, பல அரிய யோசனைகளைக் கூறினர்.

இப்புத்தகம் நல்ல முறையில் அச்சாகி வெளிவருவதற்குப் பல்வகையிலும் உதவிய நண்பர்கள் பலர். அவர்களில் திருவாளர்கள் க. அ. செல்லப்பன் (பாரி நிலைய அதிபர்), 'ரத்னம்', வெ.சுப. நடேசன் (புதுகோட்டைத் தமிழ் நிலைய அதிபர்) முதலியோரை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

இப்புத்தகத்திலுள்ள பாடல்களில் ஒரு சிலவற்றைத் தவிர மற்றவை யாவும் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்தவையே. இப்பாடல்களைத் தங்கள் பத்திரிகைகளில் நல்ல முறையில் படங் களுடன் வெளியிட்டு குழந்தைகள் அவற்றைப் படிப்பதற்கு வாய்ப் பளித்த 'கண்ணன்', 'கல்கி', 'ஆனந்த விகடன்', 'உமா', 'கலைமகள்', 'கலைக்கதிர்' முதலிய பத்திரிகை ஆசிரியர்களுக்கும், வானொலி மூலம் சில பாடல்களை ஒலி பரப்பிய வானோலி நிலையத்தாருக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், இத்தொகுப்பு நன்முறையில் வெளிவர, பல்வேறு கட்டங்களிலும், ஆர்வமுடன் உதவியவர் பலர். அவர்கள் ஒவ்வொருவருக் கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குழந்தைகள் இன்பமே எனது இன்பம். அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் முக்கிய குறிக்கோள்.

வணக்கம

சென்னை
21.7.61

— அழ. வள்ளியப்பா



முதல் பகுதி

தொந்திக் கணபதி 17
மாம்பழம் 18
மரம் ஏறலாம் 19
பசுவே 20
வண்டி வருகுது 21
அதோ பாராய்! 22
துட்டுத் தந்தால் லட்டு 23
நத்தையம்மா 24
எங்களுடைய அப்பா 25
யானை வருது 26
மியாவ் மியாவ் பூனையார் 27
அந்த மிருகம் 28
ஆப்பிள் 29
இன்பமாக உண்ணலாம் 30
வீடு எங்கே? 31
வாழை மரம் 32

இரண்டாம் பகுதி

மரப்பாச்சி மாப்பிள்ளை 33
அப்பா தந்த புத்தகம் 35
பறவைக் கப்பல் 37
கப்பல் ஏறுவேன் 39
வெள்ளைக் கன்றுக்குட்டி 40
தோசை நல்ல தோசை 41
நானே ராஜா 43
பொம்மைக் கல்யாணம் 44
திராட்சைப் பழம் 45
ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை 47
தவளையாரே 49
அணிற் பிள்ளை 51
முதல் எழுத்து 53
அழகு நிலா 54
பள்ளிக்கூட பை 55
எங்கள் மொழி 56

மூன்றாம் பகுதி

மலர்கள்	57	மழை	69
வானவில்	58	அதிசய ஆலமரம்	71
நானாக இருந்தால் ...?	59	என் குதிரை	73
வீடு கட்டுவோம்	61	முக்கனிகள்	75
நீயும் நானும்		இரண்டு சக்கர வண்டி	76
கேட்கலாம்	63	போலீஸ்காரர்	77
வெள்ளை முயல்	65	கொடி வணக்கம்	79
காற்று எங்கே?	67	காந்தி சொல்	80

நான்காம் பகுதி

பூனைக் குட்டிகள்	81	சிறு விளக்கு	96
குதிரைச் சவாரி	82	சுதந்திரத் திருநாள்	97
ரொட்டி வாங்கிடுவாய்	83	தோட்டம்	99
வித்தைக் குரங்கு	85	வித்தைக்காரன்	101
எங்கள் நேருஜி	87	தீபாவளி	103
கவிமணித் தாத்தா	89	ஆடும் மயில்	105
என்னிடம்		பார்த்துப் போ தம்பி	107
இருந்தால்...?	91	தம்பியும் தும்பியும்	109
இறகு	93	கார்த்திகைத் தீபம்	110
அதிசய வீடு	95	நான் குழந்தையானால்	111

ஐந்தாம் பகுதி

எங்கள் பள்ளி	113	ஆண்டு பிறந்தது	127
பிறைச் சந்திரன்	115	அழைக்கும் ரோஜா	128
முப்பெரும் புலவர்	117	குழந்தைகள்	
கதை சொல்லும் அண்ணன்	119	நூல் நிலையம்	129
ஔவை	121	காந்தியும் கதரும்	133
பலன்	122	செஞ்சிலுவைச் சங்கம்	135
தங்கையின் நடனம்	123	காந்தி வழி	137
எங்கள் தாத்தா	125	ஏழை சிறுவன்	144

கதைப் பாடல்கள்

ஆமையாரின் அவசரம்	145	என்ன வேண்டும்?	154
பையனும் பச்சைக்கிளியும்	147	என்ன நடக்குமோ?	157
உமியும் அரிசியும்	149	ஏமாற்றம்	159
எலியும் பூனையும்	151	கிளியின் நன்றி	161

கடலின் ஆழம்...? 165
கடைசி நாள் 167
குட்டிப் பென்சில் 169
தாத்தாவின் கோபம் 172
மனித வேட்டை 175
பரீட்சை முடிவு 179
மன்னனும் வேதாந்தியும் 183
காவல்காரர் 185
நேருஜியும் தேளும் 188
சுய விளம்பரம் 191
அழியாச் செல்வம் 195
தேர் கொடுத்தவர் 197
சிறிய வீடு 199
மயிலுக்குப் போர்வை 201
குதிரை கொடுத்தது! 203
உருவப் படம் 206

வேடிக்கைப் பாடல்கள்

இது பாட்டு இல்லையே! 209, 210
நேரு தந்த யானை 211
வினோத விடைகள் 213
மாப்பிள்ளையும் பெண்ணும் 215
இருபது பேர்கள் 217
சக்கரம் இல்லா வண்டியிலே...? 218
பாடிப் பார் 219
தொப்பென்று வீழ்ந்தான் 220
பட் பட்! 221
பால்காரரே 223
ஒரு முழ மூக்கு 224



முதல் பகுதி

தொந்திக் கணபதி

தொந்திக் கணபதி, வா வா வா.
வந்தே ஒருவரம் தா தா தா.
கந்தனின் அண்ணா, வா வா வா.
கனிவுடன் ஒருவரம் தா தா தா.

ஆனை முகத்துடன் வா வா வா.
அவசியம் ஒருவரம் தா தா தா.
பானை வயிற்றுடன் வா வா வா.
பணிந்தேன்; ஒருவரம் தா தா தா.

எல்லாம் அறிந்த கணபதியே,
எவ்வரம் கேட்பேன், தெரியாதா?
நல்லவன் என்னும் ஒருபெயரை
நான்பெற நீவரம் தா தா தா.

மாம்பழம்

மாம்பழமாம் மாம்பழம்.
மல்கோவா மாம்பழம்.

சேலத்து மாம்பழம்.
தித்திக்கும் மாம்பழம்.

அழகான மாம்பழம்.
அல்வாபோல் மாம்பழம்.

தங்கநிற மாம்பழம்.
உங்களுக்கும் வேண்டுமா?

இங்கேஓடி வாருங்கள்;
பங்குபோட்டுத் தின்னலாம்.

தென்னைமரத்தில் ஏறலாம்.
தேங்காயைப் பறிக்கலாம்.

மாமரத்தில் ஏறலாம்.
மாங்காயைப் பறிக்கலாம்.

புளியமரத்தில் ஏறலாம்.
புளியங்காயைப் பறிக்கலாம்.

நெல்லிமரத்தில் ஏறலாம்.
நெல்லிக்காயைப் பறிக்கலாம்.

வாழைமரத்தில் ஏறினால்,
வழுக்கிவழுக்கி விழுகலாம்!



பசுவே, பசுவே, உன்னைநான்
பார்த்துக் கொண்டே இருக்கின்றேன்.

வாயால் புல்லைத் தின்கின்றாய்.
மடியில் பாலைச் சேர்க்கின்றாய்.

சேர்த்து வைக்கும் பாலெல்லாம்
தினமும் நாங்கள் கறந்திடுவோம்.

கறந்து கறந்து காப்பியிலே
கலந்து கலந்து குடித்திடுவோம்.

வண்டி வருகுது

கடகடா கடகடா வண்டி வருகுது
காளை மாடு இரண்டு பூட்டி வண்டி வருகுது.

டக்டக் டக்டக் வண்டி வருகுது.
தாவித் தாவி ஓடும் குதிரை வண்டி வருகுது.

ட்ரிங்ட்ரிங் ட்ரிங்ட்ரிங் வண்டி வருகுது
சீனு ஏறி ஓட்டும் சைக்கிள் வண்டி வருகுது.

பாம்பாம் பாம்பாம் வண்டி வருகுது.
பாய்ந்து வேக மாக மோட்டார் வண்டி வருகுது.

குப்குப் குப்குப் வண்டி வருகுது.
கும்ப கோண மிருந்து ரயில் வண்டி வருகுது!

அதோ பாராய்!

குதித்துக் குதித்தே ஓடும்
குதிரை அதோ பாராய்.

அசைந்து அசைந்து செல்லும்
ஆனை இதோ பாராய்.

பறந்து பறந்து போகும்
பருந்து அதோ பாராய்.

நகர்ந்து நகர்ந்து செல்லும்
நத்தை இதோ பாராய்.

தத்தித் தத்தித் போகும்
தவளை அதோ பாராய்.

துள்ளித் துள்ளி நாமும்
பள்ளி செல்வோம், வாராய்.



துட்டுத் தந்தால் லட்டு

வெங்கு, வெங்கு, வெங்கு
வெங்கு ஊதினான் சங்கு.
நுங்கு, நுங்கு, நுங்கு
நுங்கில் எனக்குப் பங்கு.

வள்ளி, வள்ளி, வள்ளி
வள்ளி கொலுசு வெள்ளி
பள்ளி, பள்ளி, பள்ளி
பள்ளி செல்வோம் துள்ளி.

பட்டு, பட்டு, பட்டு
பட்டு வாயில் பிட்டு.
துட்டு, துட்டு, துட்டு
துட்டுத் தந்தால் லட்டு!

நத்தை யம்மா, நத்தை யம்மா,
எங்கே போகிறாய்?
அத்தை குளிக்கத் தண்ணீர்க் குடம்
கொண்டு போகிறேன்.

எத்த னைநாள் ஆகும் அத்தை
வீடு செல்லவே?
பத்தே நாள்தான்; வேணு மானால்
பார்த்துக் கொண்டிரு.

எங்களுடைய அப்பா

எங்களுடைய அப்பா - அவர்
என்றும் அணிவார் ஜிப்பா.

எங்களுடைய அம்மா - அவள்
எதுவும் தருவாள் சும்மா.

எங்களுடைய தங்கை - அவள்
இனிய பெயரோ மங்கை.

எங்களுடைய தம்பி - அவன்
என்றும் தங்கக் கம்பி.

எங்களுடைய பாட்டி - அவள்
எவர்க்கும் தருவாள் பேட்டி!



யானை வருது, யானை வருது
பார்க்க வாருங்கோ.

அசைந்து, அசைந்து நடந்து வருது
பார்க்க வாருங்கோ.

கழுத்து மணியை ஆட்டி வருது
பார்க்க வாருங்கோ.

காதைக் காதை அசைத்து வருது
பார்க்க வாருங்கோ.

நெற்றிப் பட்டம் கட்டி வருது
பார்க்க வாருங்கோ.

நீண்ட தந்தத் தோடே வருது
பார்க்க வாருங்கோ.

தும்பிக் கையை வீசி வருது
பார்க்க வாருங்கோ.

தூக்கி ‘சலாம்’ போட்டு வருது
பார்க்க வாருங்கோ.



மியாவ் மியாவ் பூனையார்

மியாவ் மியாவ் பூனையார்.
மீசைக் காரப் பூனையார்.

ஆளில் லாத வேளையில்
அடுக்க ளைக்குள் செல்லுவார்.
பால் இருக்கும் சட்டியைப்
பார்த்துக் காலி பண்ணுவார்.

.மியாவ் மியாவ் பூனையார்.
மீசைக் காரப் பூனையார்.

இரவில் எல்லாம் சுற்றுவார்.
எலிகள் வேட்டை ஆடுவார்.
பரணில் ஏறிக் கொள்ளுவார்.
பகலில் அங்கே தூங்குவார்.

மியாவ் மியாவ் பூனையார்.
மீசைக் காரப் பூனையார்.

மெல்ல மெல்லச் செல்லுவார்.
மேலும் கீழும் தாவுவார்.
'ளொள்ளொள்' சத்தம் கேட்டதும்
நொடியில் ஓடிப் பதுங்குவார்.

மியாவ் மியாவ் பூனையார்.
மீசைக் காரப் பூனையார்.

அந்த மிருகம்



டக்டக் சத்தம் போடுமாம்.
தாவித் தாவி ஓடுமாம்.

கொள்ளும் புல்லும் தின்னுமாம்.
குதித்துத் குதித்துச் செல்லுமாம்.

'ஹீ...ஹீ' என்று கனைக்குமாம்.
கிட்டப் போனால் உதைக்குமாம்.

வண்டி இழுக்க உதவுமாம்.
வாலைச் சுழற்றி ஆட்டுமாம்.

சண்டித் தனமும் பண்ணுமாம்.
சாட்டை அடிகள் வாங்குமாம்.

அந்த மிருகம் என்னவாம்?
அதுவே குதிரை, குதிரையாம்!

ஆப்பிள்



தங்கம் போலப் பளப ளென்றே
ஆப்பிள் இருக்குது.

தங்கைப் பாப்பா கன்னம் போலே
ஆப்பிள் இருக்குது.

எங்கள் ஊருச் சந்தை யிலே
ஆப்பிள் விற்குது.

எனக்கும் உனக்கும் வாங்கித் தின்ன
ஆசை இருக்குது.

வாழைக்காய் வேணுமா?
வறுவலுக்கு நல்லது.

கொத்தவரை வேணுமா?
கூட்டுவைக்க நல்லது.

பாகற்காய் வேணுமா?
பச்சடிக்கு நல்லது.

புடலங்காய் வேணுமா?
பொரியலுக்கு நல்லது.

தக்காளி வேணுமா?
சாம்பாருக்கு நல்லது.

ஃ ஃ ஃ

இத்தனையும் வாங்கினால்,
இன்றே சமையல் பண்ணலாம்.

இன்றே சமையல் பண்ணலாம்.
இன்ப மாக உண்ணலாம்.

வண்ணக் கிளியே, வீடெங்கே?
மரத்துப் பொந்தே என்வீடு.

தூக்கணங் குருவி, வீடெங்கே?
தொங்குது மரத்தில் என்வீடு.

கறுப்புக் காகமே, வீடெங்கே?
கட்டுவேன் மரத்தில் என்வீடு.

பொல்லாப் பாம்பே, வீடெங்கே?
புற்றும் புதருமே என்வீடு.

கடுகடு சிங்கமே, வீடெங்கே?
காட்டுக் குகையே என்வீடு.

நகரும் நத்தையே, வீடெங்கே?
நகருதே என்னுடன் என்வீடு!

வாழை மரம்

வாழைமரம், வாழைமரம்
வழவழப்பாய் இருக்கும் மரம்.

சீப்புச்சீப்பாய் வாழைப்பழம்
தின்னத்தின்னக் கொடுக்கும் மரம்.

பந்திவைக்க இலைகளெலாம்
தந்திடுமாம் அந்த மரம்.

காயும்பூவும் தண்டுகளும்
கறிசமைக்க உதவும் மரம்.

கலியாண வாசலிலே
கட்டாயம் நிற்கும் மரம்!

இரண்டாம் பகுதி

மரப்பாச்சி மாப்பிள்ளை

மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை.
மரப்பாச்சி மாப்பிள்ளை.
பூப்போட்ட சட்டையைப்
போட்டிருக்கும் மாப்பிள்ளை.

சாப்பிடவே மாட்டாராம்.
சாதுபோலே இருப்பாராம்.
கூப்பிட்டாலும் திரும்பியே
குரல்கொடுக்க மாட்டாராம்.

மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை.
மரப்பாச்சி மாப்பிள்ளை.

கறுத்தநிறம் ஆனாலும்
களையுடனே இருப்பாராம்.
சிரித்தமுகம் ஒருபோதும்
சிடுசிடுக்க மாட்டாராம்.

மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை.
மரப்பாச்சி மாப்பிள்ளை.

கண்ணைமூட மாட்டாராம்.
கால்கடுக்க நிற்பாராம்.
சின்னப்பிள்ளை கூட்டத்திலே
செல்லமாக இருப்பாராம்.

மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை
மரப்பாச்சி மாப்பிள்ளை.



அப்பா தந்த புத்தகம்

அப்பா வாங்கித் தந்தது
அருமை யான புத்தகம்.
அதில் இருக்கும் படங்களோ
ஆஹா மிக அற்புதம்!

யானை உண்டு, குதிரை உண்டு
அழகான முயலும் உண்டு
பூனை உண்டு, எலியும் உண்டு
பொல்லாத புலியும் உண்டு

அப்பா வாங்கித் தந்தது
அருமை யான புத்தகம்.

குயிலும் உண்டு, குருவி உண்டு.
கொக்கரக்கோ கோழி உண்டு.
மயிலும் உண்டு, மானும் உண்டு.
வாலில்லாத குரங்கும் உண்டு.

அப்பா வாங்கித் தந்தது
அருமை யான புத்தகம்.

பந்து உண்டு, பட்டம் உண்டு.
பம்பரமும் கூட உண்டு.
இன்னும் அந்தப் புத்த கத்தில்
எத்தனையோ படங்கள் உண்டு.

அப்பா வாங்கித் தந்தது
அருமை யான புத்தகம்.
அதில் இருக்கும் படங்களோ
ஆஹா மிக அற்புதம்!



பறவைக்கப்பல்

அதோ, அதோ பறவைக் கப்பல்,
ஆகா யத்தில் செல்லுது!
அதிச யமாய் எல்லோ ரையும்
அங்கே பார்க்கச் சொல்லுது.

வெள்ளைப் பறவை போலே அதுவும்
மேலே நமக்குத் தோன்றுது.
மேகத் திற்குள் புகுந்து புகுந்து
வேடிக் கையும் காட்டுது.

மனிதர் தம்மைத் தூக்கிக் கொண்டு
வானத் திலே பறக்குது.
வயிற்றுக் குள்ளே பத்தி ரமாய்
வைத்துக் கொண்டே செல்லுது.

காடு மேடு கடல்க ளெல்லாம்
கடந்து கடந்து செல்லுது.
கண்ணை மூடித் திறப்ப தற்குள்
காத தூரம் தாண்டுது!

வாயை மூடிப் போடும் சத்தம்
வந்து காதைத் துளைக்குது.
வால் இருந்தும் சேஷ்டை இல்லை;
வழியைப் பார்த்துப் போகுது!



கப்பல் ஏறுவேன்

அப்பா வோடு நானுமே
கப்பல் ஏறப் போகிறேன்.
கப்பல் ஏறி உலகெலாம்
கண்டு நானும் திரும்புவேன்.

அப்பா வோடு நானுமே
கப்பல் ஏறப் போகிறேன்.
அப்பா லுள்ள நாடுகள்
அனைத்தும் கண்டு திரும்புவேன்.

அப்பா வோடு நானுமே
கப்பல் ஏறப் போகிறேன்.
எப்போ கப்பல் ஏறுவேன்
என்று தானே கேட்கிறீர்?

அப்பா கப்பல் ஏறிடும்
அன்றே நானும் ஏறுவேன்.
அப்போ உங்கள் அனைவரின்
ஆசி பெற்றுச் செல்லுவேன்.



வெள்ளைக் கன்றுக்குட்டி

வெள்ளை வெள்ளைக் கன்றுக் குட்டி.
மிகவும் நல்ல கன்றுக் குட்டி.
துள்ளிக் குதிக்கும் கன்றுக் குட்டி.
சோம்பல் இல்லாக் கன்றுக் குட்டி.

அம்மா என்னும் கன்றுக் குட்டி.
ஆசை யான கன்றுக் குட்டி.
சும்மா சும்மா தலையை ஆட்டிச்
சொல்வ தென்ன கன்றுக் குட்டி?

உன்னைப் போல வேக மாக
ஓடு வேனே கன்றுக் குட்டி.
என்னைத் துரத்திப் பிடிக்க வருவாய்.
எங்கே பார்ப்போம், கன்றுக் குட்டி.

தோசை நல்ல தோசை - அம்மா
சுட்டுத் தந்த தோசை.
ஆசை யாக எனக்கே - என்
அம்மா தந்த தோசை.

வட்ட மான தோசை - அது
மாவில் சுட்ட தோசை.
தட்டு நிறைய நிறைய - அம்மா
சுட்டுத் தந்த தோசை.

காசு கேட்க வில்லை - என்னைக்
காக்க வைக்க வில்லை.
தோசை வேணும் என்றேன் - அம்மா
சுட்டுச் சுட்டுத் தந்தாள்.

ஒன்று, இரண்டு, மூன்று - என்றே
உள்ளே பிய்த்துப் போட்டேன்.
இன்னும் ஒன்று, ஒன்று - என்றே
எடுத்து, எடுத்து வைத்தாள்.

தின்றேன் நிறையத் தோசை - மேலும்
தின்னத் தானே ஆசை.
என்ன செய்வேன்? வயிற்றில் - துளி
இடமும் இல்லை, இல்லை!

ஆயிரம் தங்கக் காசிருந்தால்
ஆனை ஒன்று வாங்கிடுவேன்.
ஆனை ஒன்று வாங்கிடுவேன்.
அதன்மேல் ஏறி அமர்ந்திடுவேன்.

தெருவில் எங்கும் சுற்றிடுவேன்.
சிறுவர் தொடரச் சென்றிடுவேன்.
அருமை நண்பன் முத்துவையும்
அருகில் ஏற்றிக் கொண்டிடுவேன்

'நானே ராஜா' என்றிடுவேன்.
நண்பன் முத்து மந்திரியாம்.
ஆனை வாங்கப் பணம்தேவை.
ஆசை உண்டு; காசில்லையே!

பொம்மைக் கல்யாணம்

பொம்மைக்கும் பொம்மைக்கும் கல்யாணம்.
புறப்படப் போகுதாம் ஊர்கோலம்.

தெருவில் எங்கும் தடபுடலாம்.
சிறுவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்தனராம்.

கிட்டு தலைமேல் மாப்பிள்ளை.
சீதா தலைமேல் மணப்பெண்ணாம்.

தகரக் குவளை தவுலாகும்.
சங்கரன் அடிப்பான் டும்டும்டும்.

ஓலைச் சுருளே நாகசுரம்.
உத்தமன் ஊதுவான் பிப்பீப்பீ.

உப்பிய கன்னம் இரண்டுடனே
ஒத்தூ திடுவான் முத்தையா.

ஃ ஃ ஃ

மாப்பிள்ளைப் பையன் ஊர்எதுவோ?
மணப்பெண் ஊரும் தெரிந்திடுமோ?

திருப்பதிப் பொம்மை மாப்பிள்ளையாம்.
சீரங்கப் பொம்மை மணப்பெண்ணாம்.

அழைப்பில் லாமல் நடக்கிறதே
ஆஹா, அற்புதக் கல்யாணம்!

திராட்சைப் பழம் - நல்ல
திராட்சைப் பழம்.
தின்னதின்ன இனிமை யான
திராட்சைப் பழம்.

கொத்துக் கொத்தாய் இருக்குமாம்.
கொடியில் மேலே தொங்குமாம்.
அத்த னையும் பறிக்கவே
ஆசை யாக இருக்குமாம்.

திராட்சைப் பழம் - நல்ல
திராட்சைப் பழம்.

காற்றில் ஆடி அசையுமாம்.
கற்கண் டைப்போல் இனிக்குமாம்.
பார்க்கப் பார்க்க, எட்டியே
பறித்துத் தின்னத் தூண்டுமாம்.

திராட்சைப் பழம் - நல்ல
திராட்சைப் பழம்.

பச்சைக் கோலி போலவே
    பளப ளப்பாய் இருக்குமாம்.
நிச்ச யமாய் வாயிலே
    எச்சில் ஊறச் செய்யுமாம்.

திராட்சைப் பழம் - நல்ல
திராட்சைப் பழம்.
தின்ன தின்ன இனிமை யான
திராட்சைப் பழம்.



ஞாயிற்றுக்கிழமை பிறந்த பிள்ளை

ஞாயிற்றுக் கிழமை பிறந்த பிள்ளை
நன்றாய்ப் பாடம் படித்திடுமாம்.

திங்கட் கிழமை பிறந்த பிள்ளை
தினமும் உண்மை பேசிடுமாம்.

செவ்வாய்க் கிழமை பிறந்த பிள்ளை
செய்வதை ஒழுங்காய்ச் செய்திடுமாம்.

புதன் கிழமை பிறந்த பிள்ளை
பெற்றோர் சொற்படி நடந்திடுமாம்.

வியாழக் கிழமை பிறந்த பிள்ளை
மிகவும் பொறுமை காட்டிடுமாம்.

வெள்ளிக் கிழமை பிறந்த பிள்ளை
வேண்டும் உதவிகள் செய்திடுமாம்.

சனிக் கிழமை பிறந்த பிள்ளை
சாந்த மாக இருந்திடுமாம்.

ஃ ஃ ஃ

இந்தக் கிழமைகள் ஏழுக்குள்
எந்தக் கிழமையில் நீ பிறந்தாய்?

அலமு

ஞாயிற்றுக் கிழமை நான்பிறந்தேன்.
நன்றாய்ப் பாடம் படித்திடுவேன்.

அழகப்பன்

திங்கட் கிழமை நான்பிறந்தேன்.
தினமும் உண்மை பேசிடுவேன்.

(இப்படியே ஒவ்வொரு குழந்தையும் அவரவர் பிறந்த கிழமைக்கு ஏற்றபடி பதில் கூறலாம்.)

தவளையாரே

தத்தித் தத்தி ஓடிவரும்
 தவளையாரே - கொஞ்சம்
தயவு செய்து நின்றிடுவீர்
 தவளையாரே.

சுத்த மாகத் தினம்குளித்தும்
 தவளையாரே - உடல்
சொறி சொறியாய் இருப்பதேனோ
 தவளையாரே?

பூச்சி புழு பிடித்துவரும்
 தவளையாரே - உம்மைப்
பிடித்துப் பாம்பு தின்பதேனோ?
 தவளையாரே.

மாரிக் காலம் வந்து விட்டால்
 தவளையாரே - ஏனோ
வறட்டுக் கத்தல் கத்துகிறீர்
 தவளையாரே?

நீருக் குள்ளே நீச்சடிக்கும்
தவளையாரே - இங்கே
நிலத்தில் வந்து குதிப்பதேனோ
தவளையாரே?

ஊமை போல இருப்ப தேனோ
தவளையாரே? - சும்மா
உருண்டைக் கண்ணால் பார்ப்பதேனோ
தவளையாரே?



அணிற் பிள்ளை

அழகு மிக்க பிள்ளையே,
அங்கும் இங்கும் ஓடியே
பழங்கள் தேடிப் பிடிக்கிறாய்.
பையப் பையக் கொறிக்கிறாய்.

வளைத்து வாலைத் தூக்குவாய்.
மரத்தின் உச்சி ஏறுவாய்.
கிளைகள் தோறும் தாவுவாய்.
கெடுதி ஏதும் செய்திடாய்.

மூன்று கோடு முதுகிலே
முன்பு ராமர் தந்ததோ?
நான்கு முகத்துப் பிரமனால்,
நன்கு படைக்கப் பட்டதோ?

கேட்ட கேள்வி கேட்டதும்
கீச்சுக் கீச்சு என்கிறாய்.
ஓட்டம் பிடிக்கப் பார்க்கிறாய்.
ஒளிந்து கொள்ள நினைக்கிறாய்.



காக்கை ஒன்று வந்தது;
காகா காகா என்றது.

குயிலும் அங்கே வந்தது;
குகூ குகூ என்றது.

கிளியும் பறந்து வந்தது;
கிகீ கிகீ என்றது.

முழுப் பெயரையும் சொல்லவே
முடிய வில்லை. ஆகையால்,

முதல் எழுத்தை மட்டுமே
மூச்சுப் பிடித்துக் கூறுமே!

பந்து வடிவ மாயிருக்கும்
பகலில் எல்லாம் ஒளிந்திருக்கும்
அந்த ரத்தில் வந்துநிற்கும்

அழகு நிலா, அதோ பார்.
அழகு நிலா, அதோ பார்.

கப்பலைப்போல் ஊர்ந்து செல்லும்
கடலைக்கூடக் கடந்து செல்லும்
அப்பம் போல வட்டமான

அழகு நிலா, அதோ பார்.
அழகு நிலா, அதோ பார்.

ஊருக் கெல்லாம் ஒரு விளக்காம்
உயரக் காணும் தெருவிளக்காம்
யாரும் ஏற்றி வைக்கவில்லை.

அழகு நிலா, அதோ பார்.
அழகு நிலா, அதோ பார்.

பள்ளிக்கூடப் பை

பள்ளிக் கூடப் பையிலே
பாடப் புத்தகம் இருக்குது.
பாடப் புத்தகம் இருக்குது.
பலகை ஒன்றும் இருக்குது.

பையைத் தோளில் மாட்டுவேன்.
பள்ளிக் கூடம் செல்லுவேன்.
பள்ளிக் கூடம் செல்லுவேன்.
படித்த பாடம் சொல்லுவேன்.

ஆண்டு தோறும் தேறுவேன்.
அறிஞ னாக மாறுவேன்.
அறிஞ னாக மாறுவேன்.
அனைவ ருக்கும் உதவுவேன்.

காலையில் மலரும் தாமரை காணக்
களிப்புடன் வருவீர், தோழியரே.
மாலையில் மலரும் மல்லிகை காண
மகிழ்வுடன் வருவீர், தோழியரே.

அந்தியில் மலரும் அல்லியைக் காண
அன்புடன் வருவீர், தோழியரே.
எந்தச் சமயமும் சோலையில் வந்தால்
இன்பம் பெறலாம், தோழியரே.



அண்ணா, அண்ணா, வான வில்லின்
அழகைப் பாராய் அண்ணா.
என்னே அழகு! பார்க்கப் பார்க்க
இன்பம் தானே அண்ணா.

வானில் அந்த வில்லைத் தூக்கி
வைத்த தாரோ அண்ணா?
ஏணி மேலே ஏணி வைத்தால்
எட்டு மோசொல் அண்ணா?

அடுக்க டுக்காய் ஏழு வர்ணம்
அதனில் தெரியு தண்ணா.
எடுத்து வில்லைப் பிடிப்ப தற்கே
எவரும் உண்டோ அண்ணா?

எடுத்து வில்லைப் பிடித்த போதும்
என்ன செய்வ தண்ணா?
தொடுப்ப தற்கே அம்பும் உண்டோ?
சொல்வாய் அருமை அண்ணா?



நானாக இருந்தால்...?

டாக்ட ராக நானிருந்தால்
நாடி பிடித்துப் பார்த்திடுவேன்.
நாக்கை நீட்டு என்றிடுவேன்.
நன்றாய் ஊசி போட்டிடுவேன்.

வாத்தி யாராய் நானிருந்தால்
வகுப்பில் பாடம் நடத்திடுவேன்.
பார்த்துப் பரீட்சை எழுதுகிற
பைய னுக்குச் சுழித்திடுவேன்.

வக்கீ லாக நானிருந்தால்
வழக்கை நன்றாய் நடத்திடுவேன்.
டக்டக் கென்று பொய்யர்களை
நாலே கேள்வியில் மடக்கிடுவேன்.

நடிக னாக நானிருந்தால்
நாடகம், சினிமா, வானொலியில்
'அடடா!' என்று மெச்சிடவே
அற்புத மாக நடித்திடுவேன்.

சிப்பா யாக நானிருந்தால்
துப்பாக் கியுடன் இருந்திடுவேன்.
எப்போ தும்நான் துணிச்சலுடன்,
எதிரிகள் ஓடச் செய்திடுவேன்.

போலீ சாக நானிருந்தால்
பொல்லாத் திருடனைப் பிடித்திடுவேன்
காலிச் சிறைக்குள் தள்ளிடுவேன்.
கம்பி எண்ணச் செய்திடுவேன்.

வீடு கட்டுவோம்

செங்கல் வேண்டாம், சிமிண்டும் வேண்டாம்
செலவும் வேண்டாம் தம்பி - வெகு
சீக்கி ரமாய்க் கட்டிடலாம்
சிறந்த வீடு தம்பி.

இரும்பும் வேண்டாம், மரமும் வேண்டாம்
எதுவும் வேண்டாம் தம்பி - மிக
எளிதில் நாமும் கட்டிடலாம்
இனிய வீடு தம்பி.

கொத்தர் வேண்டாம், தச்சர் வேண்டாம்
கொல்லர் வேண்டாம் தம்பி - ஒரு
குறையும் இன்றிக் கட்டிடலாம்
அருமை வீடு தம்பி.

கதவு வேண்டாம், சன்னல் வேண்டாம்
கம்பி வேண்டாம் தம்பி - உள்ளே
கள்ளர் எவரும் நுழைய மாட்டார்
கவலை வேண்டாம் தம்பி.

சாவி வேண்டாம், பூட்டும் வேண்டாம்
தாழும் வேண்டாம் தம்பி - நம்
சர்க்கா ருக்கு வீட்டு வரியும்
தரவே வேண்டாம் தம்பி

காசு பணம் கருவி பற்றிக்
கவலை ஏனோ தம்பி - நாம்
கடலின் ஓரம் மணலில் வீடு
கட்டு தற்கே தம்பி?



நீயும் நானும் கேட்கலாம்

அறையி னுள்ளே இருந்தபடி
ஆசை யோடு கேட்கலாம்.

ஆளை நேரில் பார்த்திடாமல்
அவரின் குரலைக் கேட்கலாம்.

பாக வதர்கள் பாடுகின்ற
பாட்டைக் கேட்டுச் சுவைக்கலாம்.

பக்க வாத்தி யங்களெல்லாம்
மிக்க நன்றாய்க் கேட்கலாம்.

சிறுவர் நடத்தும் நிகழ்ச்சியாவும்
சேர்ந்து கேட்டு மகிழலாம்.

பெரிய மனிதர் பேசுகின்ற
பேச்சைக் கூடக் கேட்கலாம்.

இந்தி யாவில் மட்டுமன்றி
இந்தப் பெரிய உலகிலே,

எங்கெங் கேயோ நடப்பதெல்லாம்
இருந்த படியே கேட்கலாம்.

நாட கங்கள், கவியரங்கம்,
நல்ல நல்ல நிகழ்ச்சிகள்

ரேடி யோவைத் திருகிவிட்டு
நீயும் நானும் கேட்கலாம்!

வெள்ளை முயல்



துள்ளித் துள்ளி ஓடுதுபார்
வெள்ளை முயல் அம்மா - அதை
மெள்ள ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா.

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சிப் பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா.

பளிங்குக் கண்ணைக் கூர்ந்து நானும்
பார்க்க ஆசை அம்மா - அது
ஒளிந்து கொள்ளப் புதரை நோக்கி
ஓடப் பார்க்கு தம்மா.

புல்லைத் தினமும் பிடுங்கிப் பிடுங்கிப்
போடு வேனே அம்மா - அது
மெல்ல மெல்லக் கடித்துக் கடித்து
உள்ளே தள்ளும் அம்மா

நெட்டைக் காது இரண்டும் மேலே
நிமிர்ந்து நிற்கு தம்மா - நான்
தொட்டுப் பிடித்தே இழுக்க மாட்டேன்;
சொல்லை நம்பு அம்மா!



அண்ணன் - காற்றை எந்த இடத்திலேனும்
கண்ட துண்டோ தம்பிநீ?

தம்பி - காற்றை இந்தக் கண்களாலே
கண்ட தில்லை இதுவரை.

அண்ணன் - காற்றை யாரும் கண்டதாகக்
காதில் கேட்ட துண்டோநீ?

தம்பி - காற்றை எவரும் கண்டதாகக்
காதில் விழவும் இல்லையே!

அண்ணன் - காற்று உண்டு உலகில் என்று
கண்டு கொள்வ தெப்படி?

தம்பி - கண்டு பிடிக்க வழிகள் உண்டோ?
கற்றுத் தருவாய் அண்ணனே.

ஃ ஃ ஃ

அண்ணன்

பட்டம் மேலே செல்வதைப் பார்.
பச்சை இலைகள் அசைவதைப் பார்.
கடலில் அலைகள் எழுவதைப் பார்.
காகி தங்கள் பறப்பதைப் பார்.

இவைக ளெல்லாம் யாரினாலே?
இன்னும் தெரிய வில்லையா?

தம்பி

ஆமாம், ஆமாம், காற்றினாலே
அறிந்து கொண்டேன் அண்ணனே!





வீதி நடுவில் ஒன்று சேர்ந்து
விதம் விதமாய் ஆடினோம்.
பாதி ஆட்டம் ஆடும் முன்னே
'படப' டென்று பெய்தது.

வெள்ளிக் கம்பி போலப் பெய்து
விரட்டி விட்ட தெங்களை.
துள்ளிக் குதித்து வீடு சென்றோம்
துரித மாக யாவரும்.

நின்ற பிறகு வீதி யெங்கும்
நெடுகத் தண்ணீர் ஓடவே
ஒன்று சேர்ந்து குடுகு டென்றே
ஓடி வந்தோம் யாவரும்.

கத்திக் கப்பல், சண்டைக் கப்பல்
கணக்கில் லாமல் நாங்களும்
எத்த னையோ மிதக்க விட்டோம்
எல்லாம் காகி தத்திலே!

ஆடி ஆடிச் செல்லும் என்றன்
அழகுக் கப்பல் தன்னுடன்
ஆடிப் பாடிச் சென்ற தாலே
அதிக நேரம் ஆனதே!



அதிசய ஆலமரம்



அதிசயம்! அதிசயம்!
அடையாற்றில் அதிசயம்! - அது
ஆலமரம் வளர்ந்திருக்கும்
அற்புதமாம் ரகசியம்!

அகலத்தையும் நீளத்தையும்
அளந்து பார்த்தேன் - அம்மாடியோ!
அவ்வளவு பெரியதான
ஆலமரம் அதிசயம்!

அதிசயம்! அதிசயம்!
அடையாற்றில் அதிசயம்! அது
ஆலமரம் வளர்ந்திருக்கும்
அற்புதமாம் ரகசியம்!

ஆயிரம்பேர் வந்தாலும்
அதன் அடியில் தங்கலாம்.
அமைதியாக இருக்கலாம்.
ஆனந்தமே கொள்ளலாம்.

அதிசயம்! அதிசயம்!
அடையாற்றில் அதிசயம்! - அது
ஆலமரம் வளர்ந்திருக்கும்
அற்புதமாம் ரகசியம்!

உலகத்திலே பெரியதாய்
உள்ளமரம் மூன்றிலே
ஒருமரம்தான் இம்மரம்
உண்மையிலே பெருமரம்!

அதிசயம்! அதிசயம்!
அடையாற்றில் அதிசயம்! - அது
ஆலமரம் வளர்ந்திருக்கும்
அற்புதமாம் ரகசியம்!



என் குதிரை



எங்கள் வீட்டில் ஒருகுதிரை
எனக்கே சொந்தம் அக்குதிரை.
தங்கம் போலே அதன்நிறமாம்.
சவாரி செய்ய உதவிடுமாம்.

கொள்ளும் புல்லும் கேட்காது;
கொடுத்தால் கூடத் தின்னாது;
பல்லைக் காட்டிக் கனைக்காது;
பலமாய்க் காலால் உதைக்காது;

சாட்டை கண்டு மிரளாது;
தரையில் படுத்துப் புரளாது;
காட்டுச் சிங்கம் வந்தாலும்,
கலங்கி ஓடி ஒளியாது.

சண்டித் தனங்கள் செய்யாது;
தள்ளிக் கீழே வீழ்த்தாது;
சண்டை வந்தால் அஞ்சாது;
தலையைத் தொங்கப் போடாது.

செஞ்சி ராஜா தேசிங்கின்
தீரக் குதிரை அதுபோலே
அஞ்சா திருக்கும் என்குதிரை.
அறுபது ரூபாய், மரக்குதிரை!



முக்கனிகள்

குலைகு லையாய்ப் பழுக்குமாம்.
கொட்டை இல்லா திருக்குமாம்.
மலிவு விலையில் வாங்கலாம்.
வாயில் உரித்துப் போடலாம்.

குண்டு குண்டாய் வடிவமாம்.
கொட்டை நடுவே இருக்குமாம்.
இரண்டு பக்கம் கடிக்கலாம்.
இனிய சாறு குடிக்கலாம்.

சட்டை முள்ளுச் சட்டையாம்.
தடித்துப் பருத்து இருக்குமாம்.
வெட்டி எடுத்துச் சர்க்கரைக்
கட்டிச் சுளையைத் தின்னலாம்.

ஃ ஃ ஃ

முக்கியமாய் நாமும்
விருப்பமுடன் போற்றும்
இக்கனிகள் மூன்றும்
முக்கனிகள் ஆகும்.



இரண்டு சக்கர வண்டி - நான்
ஏறிச் செல்லும் வண்டி.
குறைந்த விலையில் வாங்கி - நான்
குந்தி ஓட்டும் வண்டி.

எண்ணெய் ஊற்ற வேண்டாம்- அதை
எதுவும் இழுக்க வேண்டாம்.
சின்னச் சந்தில் கூட - நான்
செல்ல உதவும் வண்டி.

வழியை விட்டுச் செல்வீர் - என்று
வாயால் கூற மாட்டேன்.
அழகு மணியைக் கையால் - நான்
அடித்தே விலக வைப்பேன்.

ஒருவர் ஏறிச் செல்ல - நன்கு
உதவும் சைக்கிள் வண்டி.
இருவர் ஏற லாமே - இன்று
இல்லை, போலீஸ் தொல்லை.

கையில்தடி வைத்திருப்பார்
போலீஸ்காரர்.

காக்கிச்சட்டை போட்டிருப்பார்
போலீஸ்காரர்.

பையில்ஊதல் வைத்திருப்பார்
போலீஸ்காரர்.

பலத்தபூட்சும் அணிந்திருப்பார்
போலீஸ்காரர்.

உயரத்தொப்பி வைத்திருப்பார்
போலீஸ்காரர்.

ஊரைச்சுற்றி வந்திடுவார்
போலீஸ்காரர்.

பயத்தையெல்லாம் போக்கிடுவார்
போலீஸ்காரர்.

பட்டணத்தில் அதிகம் உண்டு
போலீஸ்காரர்.

திருடர்களைப் பிடித்திடுவார்
போலீஸ்காரர்.

சிறையினுள்ளே அடைத்திடுவார்
போலீஸ்காரர்.

சுறுசுறுப்பாய் இருந்திடுவார்
போலீஸ்காரர்.

துப்பறியும் வேலைசெய்வார்
போலீஸ்காரர்.

சைக்கிள், மோட்டார் வண்டிகளை
போலீஸ்காரர்

சைகைகாட்டி அனுப்பிடுவார்
போலீஸ்காரர்.

ஐக்கியமாய் அமைதியாக
மக்கள் வாழவே,

அனுதினமும் உழைத்திடுவார்
போலீஸ்காரர்.



கொடி வணக்கம்

ஓடியே யாவரும் வந்திடுவோம்.
ஒன்றாகச் சேர்ந்திங்கே கூடிடுவோம்.
கூடியே வட்டமாய் நின்றிடுவோம்.
கொடியை நடுவிலே ஏற்றிடுவோம்.

ஏற்றி வணக்கம் செலுத்திடுவோம்.
எல்லோரும் சேர்ந்துமே பாடிடுவோம்.
போற்றிநம் நாட்டினைக் காத்திடுவோம்.
புகழெங்கும் பரவிடச் செய்திடுவோம்.

வாழிய தாய்நாடு என்றிடுவோம்.
வாழிய தலைவர்கள் என்றிடுவோம்.
வாழிய விடுதலை என்றிடுவோம்.
வாழ்த்தி வணங்கித் துதித்திடுவோம்.

காந்தி சொல்

காந்திசொல் கேட்டிடுவாய் - அவர்
காட்டும் வழிநடப்பாய்.
சாந்தமாய் வாழ்ந்திடுவாய் - என்றும்
தருமமே காத்திடுவாய்.

மெய்ம்மையே பேசிடுவாய் - அதனால்
மேன்மை அடைந்திடுவாய்.
கைராட்டை சுற்றிடுவாய் - நல்ல
கதரை உடுத்திடுவாய்.

நாட்டிற் குழைத்திடுவாய் - என்றும்
நன்மையே செய்திடுவாய்.
ஏட்டிலே கண்டஉண்மை - தன்னை
ஏற்று நடந்திடுவாய்.

ஏழைக் கிரங்கிடுவாய் - அவர்
இன்னல்கள் போக்கிடுவாய்.
வாழையைப் போலவேநீ - எல்லா
வகையிலும் உதவிடுவாய்.



நான்காம் பகுதி

இரண்டு பூனைக் குட்டிகள்
எங்கள் வீட்டில் இருந்தன.
உருண்டு உருண்டு இரண்டுமே
ஓடி ஆடித் திரிந்தன.

தங்கை மீனா ளுடையது
தவிட்டு நிறத்துக் குட்டியாம்.
பொங்கும் பால்போல் இருந்திடும்
பூனை எனக்குச் சொந்தமாம்.

பள்ளி விட்டு வந்ததும்,
பாசத் தோடு பூனைகள்
துள்ளி வந்தே, ‘மியாவ், மியாவ்
தூக்கு’ என்றே சொல்லுமாம்.

ஆளுக் கொன்றாய்த் தூக்குவோம்.
அணைத்துக் கொஞ்சி மகிழுவோம்.
தோளின் மீதும் ஏற்றுவோம்.
சுற்றிச் சுற்றி ஆடுவோம்.



குதிரைச் சவாரி

குதிரை போல நீயுமே
குனிந்து கொள்வாய், நானுமே
முதுகில் ஏறிக் கொள்ளுவேன்.
முன்னே ஓடிச் செல்லுவாய்.

நொண்டிக் குதிரை போலவே
நின்று நின்றே போகிறாய்.
சண்டித் தனமா செய்கிறாய்?
சாட்டை அடியா கேட்கிறாய்?

பின்னால் ஏனோ செல்கிறாய்?
பிடித்துத் தள்ளும் எண்ணமோ?
என்னைக் கீழே வீழ்த்தவா
இந்த வேலை செய்கிறாய்?

கொள்ளு நிறைய வேணுமா?
புல்லும் சேர்த்துத் தருகிறேன்.
நல்ல ஜாதிக் குதிரை போல்
துள்ளிக் குதித்துச் செல்லுவாய்!

ரொட்டி வாங்கிடுவாய்

ரொட்டி வாங்கிடுவாய் - தம்பி
ரொட்டி வாங்கிடுவாய்.

பெட்டிக் குள்ளே இருந்த ரொட்டி.
பிரிய மாக வாங்கும் ரொட்டி.
கெட்டிக் காரப் பிள்ளை யெல்லாம்
கேட்டு வாங்கித் தின்னும் இந்த

ரொட்டி வாங்கிடுவாய் - தம்பி
ரொட்டி வாங்கிடுவாய்.

குறைந்த விலையில் கிடைக்கும் ரொட்டி
குழந்தை யெல்லாம் விரும்பும் ரொட்டி.
விரைந்தே ஓடி வந்தா லன்றி
விற்றுப் போகும்; சொல்லி விட்டேன்!

ரொட்டி வாங்கிடுவாய் - தம்பி
ரொட்டி வாங்கிடுவாய்.

கரடி, சிங்கம், புலியை யெல்லாம்
காண லாமே நம்மிடத்தே!
மிரள வேண்டாம், உள்ளே தள்ளி
மென்று தின்று வீர ராக

ரொட்டி வாங்கிடுவாய் - தம்பி
ரொட்டி வாங்கிடுவாய்.

பிச்சை எடுத்துப் பிழைக்க வில்லை.
பிறரை ஏய்த்துத் திருட வில்லை.
இச்சை யோடு பாடு பட்டே
இங்கு நானும் விற்கும் இந்த

ரொட்டி வாங்கிடுவாய் - தம்பி
ரொட்டி வாங்கிடுவாய்.



வித்தைக் குரங்கு

ஒட்டுப் போட்ட சட்டை - அதை
உடம்பில் மாட்டிக் கொண்டு
குட்டிக் கரணம் போடும் - இந்தக்
குரங்கைப் பாராய், தம்பி.

குல்லாப் போட்ட குரங்கு - துள்ளிக்
கோலைத் தாண்டும் குரங்கு.
பல்லை இளித்துக் காட்டி - நம்மைப்
பழிக்கும் பொல்லாக் குரங்கு.

நாமம் போட்ட குரங்கு - நன்றாய்
நடனம் ஆடும் குரங்கு.
ராமா ராமா என்றால் - உற்று
நம்மைப் பார்க்கும் குரங்கு

கூழைக் கும்பிடு போடும் - இது
கோல்எ டுத்தால் ஆடும்.
வாழைப் பழத்தைக் கொடுத்தால் - அதை
வாயில் அடக்கிக் கொள்ளும்.

தகரக் குவளை ஏந்தும் - இது
'சலாம்' போட்டு நெருங்கும்.
நகர்ந்து ஓட லாமோ? - காசு
நாமும் போட லாமே!



எங்கள் நேருஜி

உலக மெல்லாம் போற்றிவரும்
எங்கள் நேருஜி.
உண்மைக் காந்தி பரம்பரையாம்
எங்கள் நேருஜி.
நலங்க ளெல்லாம் தேடித்தந்த
எங்கள் நேருஜி.
நாட்டுக் காகக் பாடுபட்ட
எங்கள் நேருஜி.

மழலைப் பேச்சுக் கேட்டதுமே
எங்கள் நேருஜி.
மனத்தை யெல்லாம் பறிகொடுப்பார்
எங்கள் நேருஜி.
குழந்தை யோடு குழந்தையாக
எங்கள் நேருஜி.
கூடி ஆடிக் குதித்திடுவார்
எங்கள் நேருஜி.

எத் திசையும் புகழ்பரவ
எங்கள் நேருஜி,
இந்தி யாவை நடத்திச்சென்ற
எங்கள் நேருஜி.
உத்த மரில் உத்தமராம்
எங்கள் நேருஜி.
உறுதி கொண்ட நெஞ்சினராம்
எங்கள் நேருஜி.

தக்க வழி காட்டி வந்த
எங்கள் நேருஜி.
தடைக ளெல்லாம் தகர்த்துவந்த
எங்கள் நேருஜி.
மக்க ளுக்குள் மாணிக்கமாம்
எங்கள் நேருஜி.
வாழ்க, வாழ்க, வாழ்க, வாழ்க
எங்கள் நேருஜி.



கவிமணித் தாத்தா

சின்னஞ் சிறிய பிள்ளைகள்
சேர்ந்து பாடி மகிழவே
இன்ப மான கவிதைகள்
இயற்றித் தந்த கவிமணி!

பள்ளி தோறும் பிள்ளைகள்
பாடிப் பாடித் தினமுமே
துள்ளிக் குதிக்கச் செய்திடும்
தூய மனிதர் கவிமணி!

குழந்தை உள்ளம் குளிரவே
கொஞ்சு கின்ற முறையிலே
பழகு தமிழில் பாடல்கள்
பலவும் தந்த கவிமணி.

குருவி, காகம், கிளியெல்லாம்
கூட்டி வந்து காட்டுவார்.
அருமையாகப் பாட்டிலே
அன்பு மிக்க கவிமணி!

வண்ண வண்ண மலரையும்
வட்ட மான நிலவையும்
கண்ணின் முன்னே நிறுத்துவார்
கவிதை யாலே கவிமணி!

புல்லைத் தின்னும் பசுவினை,
புலம்பு கின்ற குதிரையை,
நல்ல தோழன் நாயினை
நயந்து பாடும் கவிமணி!

மலரும், தொடுத்த மாலையும்
வாடிப் போகும், ஆயினும்,
'மலரும் மாலை யும்'என
வாடி டாத நூலையே

எங்க ளுக்குத் தந்தவர்
இன்பம் பொங்கச் செய்தவர்
தங்க மான கவிமணித்
தாத்தா வைநாம் போற்றுவோம்!



என்னிடம் மாய ஜமக்காளம்
இருந்தால் அதனால் என்செய்வேன்?

உங்களை ஏற்றிச் சென்றிடுவேன்.
    உலகைச் சுற்றிக் காட்டிடுவேன்.
கங்கை, யமுனை, காவேரி,
    கடல்கள், மலைகள் கடந்திடுவேன்.

காரும் ரயிலும் ஆகாயக்
    கப்பலும் வேண்டாம் என்றிடுவேன்.
சீரும் சிறப்பும் பெற்றிடுவேன்.
    திக்விஜ யங்கள் செய்திடுவேன்.

என்னிடம் மந்திரக் கோல்ஒன்றும்
இருந்தால் அதனால் என்செய்வேன்?

மண்ணைப் பொன்னாய் மாற்றிடுவேன்.
    வாரி வாரிக் கொடுத்திடுவேன்.
சின்னஞ் சிறிய குடிசைகளைச்
    சிறந்த மாளிகை ஆக்கிடுவேன்.

பலவித மான உணவுகளும்,
பட்டா டைகளும் வரவழைப்பேன்.
உலகில் உள்ளோர் யாவருக்கும்
உதவிப் பஞ்சம் போக்கிடுவேன்.

இறகு

பார்க்கப் பார்க்க அழகுதான்
பளப ளக்கும் இறகுதான்.

ஆற்றங் கரையின் அருகிலே
அடர்ந்த தென்னந் தோப்பிலே
நேற்றுக் கண்டெ டுத்தது
நேர்த்தி யான இறகிது.

பார்க்கப் பார்க்க அழகுதான்
பளப ளக்கும் இறகுதான்.

எந்தப் பறவை போட்டதோ?
எங்கு தேடி அலையுதோ!
சொந்தக் காரப் பறவையே
வந்து கேட்டால் தருகிறேன்.

பார்க்கப் பார்க்க அழகுதான்
பளப ளக்கும் இறகுதான்.

ஏழு வர்ணம் காட்டிடும்
இந்த நல்ல இறகினைக்
கீழே போட்ட பறவையே
கேட்டால் உடனே தருகிறேன்.

சிறு விளக்கு

எண்ணெய் ஊற்ற வில்லை - யாரும்
ஏற்றி வைக்க வில்லை.
சின்னஞ் சிறிய விளக்கு - பெயர்
தெரியு மோதான் உனக்கு?

இருந்த இடத்தில் இல்லை - அது
இங்கு மங்கும் போகும்.
பறந்து செல்லும் விளக்கு - அதைப்
பார்த்த துண்டோ? சொல்வாய்.

கறுத்த வானம் தன்னில் - நன்கு
கண்சி மிட்டும் மீன்போல்
இருட்டில் ஒளியைக் காட்டும் - அதை
என்ன வென்று சொல்வாய்?

ஃ ஃ ஃ

கண்ணைக் கவரும் அதனை - நான்
கண்டு பிடித்து விட்டேன்.
மின்மி னிதான் அதுவாம் - தம்பி
வேறு எதுவும் இல்லை!

சுதந்திரத் திருநாள்



சொந்த மான நமது கொடியை
ஏற்றிடு வோமே - அதைச்
சுற்றி நின்று கூட்ட மாகப்
போற்றிடு வோமே.
இந்த நாளே அடிமை வாழ்வு
தொலைந்த தென்றுநாம் - ஒன்றாய்
எங்கும் முரசு முழங்கக் கொடியை
ஏற்றிடு வோமே.

வெள்ளை ஆட்சி முடிந்து போன
வெற்றி நாளிதே - நாம்
மேன்மை மிக்க சுதந்தி ரத்தைப்
பெற்ற நாளிதே!
வெள்ளை யோடு சிவப்பு, பச்சை
சக்க ரத்துடன் - நம்
வீட்டின் மீது கொடி பறந்து
நிற்கும் நாளிதே!

பாட்டுப் பாடி நமது கொடியை
வணங்கிடு வோமே - நாம்
பலரும் ஒன்றாய்க் கூடி ஆடி
மகிழ்ந்திடு வோமே.
கோட்டை, வீடு, வீதி யெங்கும்
கொடி பறக்குமே - இன்று
கோடி கோடி மக்க ளுக்கும்
இன்பம் பொங்குமே!

சுதந்தி ரத்தின் பெருமை தன்னை
உணர்ந்து வாழுவோம் - மக்கள்
துயரம் யாவும் துடைப்ப தற்கே
உறுதி பூணுவோம்.
இதயம் ஒன்றி இந்தி யத்தாய்
பெற்ற பிள்ளைகள் - நாம்
இன்ப முற்று வாழு தற்கு
வழிகள் காணுவோம்.



தோட்டம் நல்ல தோட்டம் - நம்மைச்
சொக்க வைக்கும் தோட்டம்.
கூட்ட மாக நாமும் - ஒன்றாய்க்
கூடி ஆடும் தோட்டம்.

பள்ளி முடிந்த உடனே - முன்
பாய்ந்தே ஓடி வருவோம்.
புள்ளி மானைப் போல - நாமும்
துள்ளிக் குதித்து மகிழ்வோம்.

வண்ண வண்ண மலரால் - நம்மை
மகிழ வைக்கும் செடிகள்!
தின்னத் தின்னப் பழங்கள் - மேலும்
தின்னக் கொடுக்கும் மரங்கள்!

கொஞ்சும் கிளியின் குரலும் - கருங்
குயிலின் இசையும், அடடா!
நெஞ்சை அள்ளு கிறதே! - இதை
நினைக்கும் போதே இன்பம்.



வித்தைக் காரன் - நல்ல
வித்தைக் காரன் - ஜோராய்
வேடிக்கை காட்டிவரும்
வித்தைக் காரன்.

சத்தம் போட்டே அழைத்திடுவான்.
தமுக்கை ஓங்கி அடித்திடுவான்.
எத்த னையோ வித்தைகளை
எங்க ளுக்குக் காட்டிடுவான்!
(வித்தைக்காரன்)

கம்பம் ஒன்றில் ஏறிநிற்பான்;
கரகம் ஒன்றைத் தலையில்வைப்பான்;
பம்ப ரம்போல் சுழன்றேஆடிப்
பார்த்த பேரைத் திகைக்கவைப்பான்!
(வித்தைக்காரன்)

கொட்டை ஒன்றைத் தரையில்வைப்பான்;
கூடை போட்டு மூடிவைப்பான்.
எட்டு நிமிஷம் ஆகுமுன்னே
எடுத்துப் பார்த்தால் மாஞ்செடியாம்!
(வித்தைக்காரன்)

மனத்தில் நாங்கள் நினைப்பதெல்லாம்
வாயை விட்டுச் சொல்லிடுவான்;
பணத்தைக் கீழே புதைத்துவிட்டுப்
பையன் கையில் வரவழைப்பான்!
(வித்தைக்காரன்)

தரையிலுள்ள மண்ணை அள்ளிச்
சர்க்க ரையாய்த் தந்திடுவான்;
மறைந்து போன மோதிரத்தை
வாழைப் பழத்தில் வரவழைப்பான்!
(வித்தைக்காரன்)

மாய வித்தை செய்திடுவான்;
மந்திர வித்தை செய்திடுவான்;
ஆயி ரம்பேர் வாய்பிளந்தே
'ஆஹா!' என்று கூறவைப்பான்!
(வித்தைக்காரன்)

இந்த நாளை நாமெலாம்
இன்ப மாகப் போற்றுவோம்.
எந்த நாளும் இப்படி
இருக்க வழிகள் தேடுவோம்.

அசுரன் அழிந்த நாளென
ஆடிப் பாடி மகிழுவோம்.
அசுரத் தனங்கள் யாவையும்
அழிக்க நாமும் முயலுவோம்.

ஆடை புதிதாய் உடுத்தியே
ஆனந் தத்தில் மூழ்குவோம்.
வாடும் ஏழை, உடையுடன்
வாழும் வகையைக் காணுவோம்.

வெடிகள் தம்மை இன்றுநாம்
வீரர் போலக் கொளுத்துவோம்.
கொடிய எண்ணம் யாவையும்
கொளுத்தி வீரம் காட்டுவோம்.

பட்ச ணங்கள் தின்றுநாம்
பாடி ஆடி மகிழுவோம்.
பட்டி னிப்பேய் தன்னையே
பாரில் ஒழித்துக் கட்டுவோம்!



ஆடும் மயில்

நட்டு வனார் இல்லாமலே
ஆடும் மயில் இது - என்றும்
நடன மேடை ஏறிடாமல்
ஆடும் மயில் இது.
கொட்டு முழக்கம் இல்லாமலே
ஆடும் மயில் இது - நன்கு
குலுக்கி மினுக்கித் தளுக்கியுமே
ஆடும் மயில் இது.

பயிற்சி ஏதும் இல்லாமலே
ஆடும் மயில் இது - பின்
பாட்டு யாரும் பாடிடாமல்
ஆடும் மயில் இது.
மயக்கும் வண்ண உடையுடனே
ஆடும் மயில் இது - அதில்
வட்ட வட்டக் கண்தெரிய
ஆடும் மயில் இது.

காலில் ஏதும் சலங்கையின்றி
ஆடும் மயில் இது - இரு
கண்ணில் மையும் தீட்டிடாமல்
ஆடும் மயில் இது.
மாலை நேரம் சோலையிலே
ஆடும் மயில் இது - 'நல்ல
மழையே, வருக, வருக' என்றே
ஆடும் மயில் இது.



பார்த்துப் போ தம்பி - நன்றாய்ப்
பார்த்துப் போ தம்பி.
பள்ளிக் கூடம் செல்லும் போது
பார்த்துப் போ தம்பி.

மோட்டார் வரும், ஜட்கா வரும்
மூர்க்க மாக லாரிவரும்.
ஆட்டோ ரிக்ஷா படப டென்றே
அலறிக் கொண்டே ஓடிவரும்.
(பார்த்துப்)

தெருவில் குறுக்கும் நெடுக்கு மாகச்
செல்லல் தீமை ஆகும் தம்பி.
விரைந்தே ஓடும் வண்டி யாலே
விபத்து நேரக் கூடும் தம்பி.
(பார்த்துப்)

கல்லும் முள்ளும் உடைந்து போன
கண்ணா டியும் கிடக்கும் தம்பி.
செல்லும் போது காலில் நல்ல
செருப்புப் போட்டுச் செல்வாய் தம்பி.
(பார்த்துப்)

சாலை நடுவே நின்று பேசல்
    தப்பு, தப்பு, தப்பு தம்பி.
நாலு பேராய்க் கையைக் கோத்து
    நடந்து போக வேண்டாம் தம்பி.
(பார்த்துப்)

பாதித் தூரம் வலது பக்கம்
    பார்த்துச் சாலை கடப்பாய் தம்பி.
மீதித் தூரம் இடது பக்கம்
    மேலும் பார்த்துச் செல்வாய் தம்பி.
(பார்த்துப்)

சாலை ஓரம் நடந்து சென்றால்
    சங்க டங்கள் இல்லை தம்பி.
சாலை விதிகள் தெரிந்த வர்க்குச்
    சற்றும் கவலை இல்லை தம்பி.

பார்த்துப் போ தம்பி - நன்றாய்ப்
பார்த்துப் போ தம்பி.
பள்ளிக் கூடம் செல்லும் போது
பார்த்துப் போ தம்பி.

அதோ பாராய் தம்பி!
அதன் பெயரே தும்பி!

தோட்டம் தன்னில் அங்கு மிங்கும்
சுற்றிச் சுற்றிப் பறக்குது.
வேட்டை யாடும் துப்பாக் கிபோல்
மெலிந்து நீண்டு இருக்குது.

அதோ பாராய் தம்பி!
அதன் பெயரே தும்பி!

கண்ணா டிபோல் சிறகு மின்னிக்
காற்றில் மெல்ல அசையுது!
கண்ணி ரண்டும் முன்னால் நின்றே
என்னை, உன்னைப் பார்க்குது!

அதோ பாராய் தம்பி!
அதன் பெயரே தும்பி!

குட்டிப் பறவைக் கப்பல் போலே
கீழும் மேலும் செல்லுது!
எட்டிப் பிடிக்கப் போனால் என்னை
ஏய்த்துப் பறந்து போகுது!

அதோ பாராய் தம்பி!
அதன் பெயரே தும்பி!



கார்த்திகைத் தீபமம்மா - எங்கும்
கண்டிடு வாயே அம்மா.
பார்த்திடப் பார்த்திடவே - உள்ளம்
பரவச மாகுதம்மா.

கூடங்கள் எல்லாமும் - அம்மா
கோபுர மேலேயும்
வீடுகள் யாவிலுமே - ஒளி
வீசுது பாராயம்மா.

சிப்பாய்கள் நிற்பதுபோல் - அதோ
தீப வரிசையம்மா,
எப்போதும் இப்படியே - இருந்தால்
இன்பம் பெருகுமம்மா.

திருவண் ணாமலையில் - கார்த்திகைத்
தீப தரிசனமாம்.
அருமை அருமையென்பார் - அங்கே
அவசியம் போவோமம்மா.



நான் குழந்தையானால்

சின்னஞ் சிறிய குழந்தையாய்
இன்று நானும் இருந்திடின்.

என்னை அம்மா தூக்கித் தூக்கி
இடுப்பில் வைத்துக் கொள்ளுவாள்.
சின்னஞ் சிறிய கன்னம் இரண்டும்
சிவக்கச் சிவக்கக் கொஞ்சுவாள்.
(சின்னஞ்)

நிலவைக் காட்டிக் காட்டி எனக்கு
நெய்யும் சோறும் ஊட்டுவாள்.
"உலகில் உன்போல் உயர்ந்த செல்வம்
உண்டோ?" என்றும் போற்றுவாள்.
(சின்னஞ்)

பொம்மை யெல்லாம் நிறைய நிறையப்
பிரிய மோடு வாங்குவாள்.
"தம்பி, மோட்டார்! பார்பார்" என்று
சாவி கொடுத்தே ஓட்டுவாள்.
(சின்னஞ்)

என்ன விரும்பிக் கேட்ட போதும்
இல்லை யென்றே சொல்லிடாள்.
சொன்ன தெல்லாம் வாங்கித் தந்து
சிரிக்க வைத்தே மகிழுவாள்.
(சின்னஞ்)

கெட்டிக் காரன் என்று சொல்லிக்
கட்டி அணைத்துக் கொள்ளுவாள்.
தொட்டி லிட்டுப் பாட்டுப் பாடித்
தினமும் தூங்கப் பண்ணுவாள்.
(சின்னஞ்)



ஐந்தாம் பகுதி



எங்கள் பள்ளிக் கூடமே
எளிமை மிக்க நிலையமே.
அங்கே சென்று கற்பதால்
அறிவு மேலும் வளருமே.

உளமும் அறிவும் பண்பட
ஊட்டும் நல்ல கல்வியை.
களங்க மின்றி வாழவே
காட்டும் நல்ல வழிகளை.

கடவுள் பணியைப் போலவே
கல்விப் பணியும் சிறந்ததாய்த்
திடமாய் நம்பித் தினமுமே
தேர்ந்த கல்வி தருபவர்

எங்கள் கல்விச் சாலையில்
இருக்கிறார்கள். ஆதலால்,
இங்கே நாங்கள் யாவரும்
இன்ப மாகப் பயில்கிறோம்.

கருத்தை ஊன்றிப் பள்ளியில்
கற்று நாங்கள் யாவரும்
சிறப்பு மிக்க மனிதராய்த்
திகழ என்றும் முயலுவோம்.

அறிவுச் செல்வம் தன்னையே
அள்ளி அள்ளித் தந்திடும்
அருமைப் பள்ளி ஓங்கவே
ஆண்ட வனை வேண்டுவோம்.

நறுக்கி எறிந்த நகத்தைப் போல
இருக்கும் நிலாவே - நீ
நகர்ந்து நகர்ந்து போவ தெங்கே?
சொல்லு நிலாவே.

ஓடம் போல வானில் ஊர்ந்து
செல்லும் நிலாவே - நான்
உன்மேல் ஏறிக் கொள்ள லாமோ?
சொல்லு நிலாவே.

கொம்பைப் போலக் கூர்மை யாக
இருக்கும் நிலாவே - என்னைக்
குத்திக் கீழே தள்ளு வாயோ?
சொல்லு நிலாவே.

வில்லைப் போல வளைந்தி ருக்கும்
வெள்ளை நிலாவே - நீ
வேட்டை யாட உதவு வாயோ?
சொல்லு நிலாவே.

பறங்கிக் கீற்றைப் போல வானில்
 தெரியும் நிலாவே- உன்னைப்
பக்கு வம்செய் துண்ண லாமோ?
 சொல்லு நிலாவே.

உடைந்து போன கண்ணா டிபோல்
 இருக்கும் நிலாவே - என்
உருவத் தைநீ காட்டு வாயோ?
 சொல்லு நிலாவே.





தமிழர்க ளெல்லாம் பெருமையுடன்
தலைநிமிர்ந் தென்றும் நின்றிடவே,
அமிழ்தம் போன்ற நூல்களினை
அளித்தவர் முப்பெரும் புலவர்களாம்.

அருமை மிக்க உண்மைகளை
அழகாய் உணர்த்தும் தனிநூலாம்
திருக்குறள் தந்த பேரறிஞர்
தெய்வப் புலமை வள்ளுவராம்.

இந்தியர் போற்றும் இதிகாசம்
இராமா யணம்அதைச் சுவையுடனே
செந்தமிழ் மொழியில் நமக்காகத்
தந்தவர் கம்பர்; கவிமன்னர்!

கற்பின் பெருமை உலகறியக்
காட்டும் சிலப்பதி காரம்எனும்
அற்புத மான காவியத்தை
அளித்தவர் அடிகள் இளங்கோவாம்.

இப்பெரும் புலவர் மூவரையும்
என்றும் போற்றிப் புகழ்ந்திடுவோம்.
முப்பெரும் நூலாம் இவைகளையே
முறையாய்க் கற்றுப்பயன் அடைவோம்!



கதை சொல்லும் அண்ணன்

மாலை நேரம் ஆனது.
மணியும் ஐந்து அடித்தது.
சோலை நோக்கிப் பிள்ளைகள்
துள்ளி ஓடி வந்தனர்.

வண்ணச் சோலை அதனிலே
மாம ரத்தின் அடியிலே
அண்ணன் ஒருவர் இருந்தனர்.
அவரே அருணன் என்பவர்.

அருணன் அருகே சென்றதும்
"அண்ணா, வணக்கம்" என்றனர்.
உரிமை யோடே அருணனை
ஒன்று கூடி மொய்த்தனர்.

தோளில் கோபு சாய்ந்தனன்.
சுந்தர் மடியில் அமர்ந்தனன்.
காலில் ஏறி வேணுவும்
கட்டிப் பிடித்துக் கொண்டனன்.

சிறுவர் மாலை வேளையில்
தினமும் அங்கே வருவதேன்?
அருணன் கூறும் கதைகளை
ஆவ லோடு கேட்கவே.

கரடி, சிங்கம், நரியெலாம்
கதையில் பேசச் செய்குவார்.
சிறுவர் வயிறு குலுங்கவே
சிரிக்க வைத்து மகிழுவார்.

வீரர் கதைகள் சொல்லுவார்.
வியப்புக் கதைகள் கூறுவார்.
தீரச் செயல்கள் புரிந்திடும்
சிறுவர் கதைகள் சொல்லுவார்.

கண்ணன் கதைகள் கூறுவார்.
காந்தி கதையும் சொல்லுவார்.
இன்னும் கதைகள் ஆயிரம்
இனிக்க இனிக்கக் கூறுவார்.

சிறுவர் மகிழ வேண்டியே
தினமும் கதைகள் கூறிடும்
அருமை யான அண்ணனாம்
அருணன் வாழ்க, வாழ்கவே!

ஔவை

ஔவைப் பாட்டி நல்ல பாட்டி - நமக்(கு)
ஆத்தி சூடி தந்த பாட்டி.
செவ்வை யாக நாமெல் லோரும் - வாழச்
சிறந்த வழி காட்டும் பாட்டி.

மன்னர் மரி யாதை செய்ய - நாட்டு
மக்கள் போற்றி வந்த பாட்டி.
என்ன செல்வம் வந்த போதும் - அதை
ஏழை கையில் தந்த பாட்டி.

எந்த ஊரும் சொந்த ஊரே - என
எங்கும் சுற்றி வந்த பாட்டி.
சொந்த நலன் ஏதும் இன்றி - தமிழ்த்
தொண்டு செய்தே வாழ்ந்த பாட்டி.

தருமம் செய்வ தாகக் கூறித்
தண்ணீர்ப் பந்தல் வைப்பவர்,
கிருமி நிறைந்த நீரை வழங்கின்
கெடுதல் அதிகம் ஆகுமே.

பிள்ளை யாவும் துள்ளி ஆடப்
பெரிய திடலை அமைப்பவர்,
முள்ளை நடுவே பரப்பி வைப்பின்
மோச மாகும் அல்லவோ?

அன்ன தானம் செய்வ தாக
அறிவித் தோர்கள், புழுவுடன்
மண்ணும் கல்லும் கலந்த சோற்றை
வழங்க லாமோ? சொல்லுவீர்.

நிறையப் புத்த கங்கள் சேர்ந்த
நிலையம் ஒன்றில், மக்களின்
அறிவைக் கெடுக்கும் நூல்க ளிருத்தல்
அந்தோ! மோசம், மோசமே!

தங்கையின் நடனம்

தைதை என்றே ஆடு கின்றாள்
தங்கை மீனா ஜோராய் - என்
தங்கை மீனா ஜோராய் - அவள்
கையைக் காலை ஆட்டு கின்ற
காட்சி தன்னைப் பாராய் - அந்தக்
காட்சி தன்னைப் பாராய்.

கையில் புல்லாங் குழலெ டுத்துக்
கண்ணன் போல வருவாள் - மாயக்
கண்ணன் போல வருவாள்.
மையைக் கண்ணில் தீட்டிக்கொண்டு
மானைப் போலப் பார்ப்பாள் - புள்ளி
மானைப் போலப் பார்ப்பாள்.

தில்லைநட ராஜ ரைப்போல்
திருந டனம் புரிவாள் - இங்கே
திருந டனம் புரிவாள்.
எல்லை யில்லா மகிழ்வுடனே
எவரும் பார்க்கச் செய்வாள் - நன்றாய்
எவரும் பார்க்கச் செய்வாள்.

குறத்தி போல உடையு டுத்திக்
　　கூடை யோடே வருவாள் - கையில்
　　கூடை யோடே வருவாள்.
குறியும் பார்த்து மனத்தி லுள்ள
　　குறைக ளெல்லாம் சொல்வாள் - நம்
　　குறைக ளெல்லாம் சொல்வாள்.

ஜிப்ஸி நடனம், பாம்பு நடனம்
　　தில்லா னாவும் அறிவாள் - நல்ல
　　தில்லா னாவும் அறிவாள்.
தப்பில் லாமல் தாளத் திற்குத்
　　தகுந்த படியே அசைவாள் - அவள்
　　தகுந்த படியே அசைவாள்.



தாத்தா எங்கள் தாத்தா - மிகத்
தங்க மான தாத்தா.
பார்த்தால் அருகில் அழைப்பார் - என்னைப்
பாசத் தோடே அணைப்பார்.

படிப்புச் சொல்லித் தருவார் - நல்ல
பழக்கம் கற்றுத் தருவார்.
சிடுசி டுக்க மாட்டார் - என்றும்
சிரித்துக் கொண்டே இருப்பார்.

அறுப துவய தாச்சு - ஆனால்,
அவரைத் தொடர்ந்து நடக்க
ஒருவரும் இல்லை இங்கே! - இது
உண்மை, உண்மை, உண்மை!

மூன்று பத்து, இரண்டு - பற்கள்
முழுதும் அவர்க்கே உண்டு.
ஊன்று கோலே வேண்டாம் - அவர்
ஓடி யாடித் திரிவார்.

பக்தி மிகவும் உடையார் - பழம்
பாடல் பலவும் அறிவார்.
யுக்தி யுடனே எதையும் - நன்கு
ஒழுங்காய் முடித்து மகிழ்வார்.

நாட்டுக் கேற்ற தலைவர் - என்றும்
நன்மை செய்வார். அவர்போல்
வீட்டுக் கேற்ற தலைவர் - இவர்
மிகவும் நல்ல தாத்தா!



ஆண்டு பிறந்தது!

ஆண்டு பிறந்தது, ஆண்டு பிறந்தது.
ஆண்டு பிறந்ததடா!
அன்பும் அறமும் அறிவும் வளர்ந்திட
ஆண்டு பிறந்ததடா!

ஆண்டு பிறந்தது, ஆண்டு பிறந்தது,
ஆண்டு பிறந்ததடா!
அன்னைநன் னாடும், மொழியும் சிறந்திட
ஆண்டு பிறந்ததடா!

ஆண்டு பிறந்தது, ஆண்டு பிறந்தது,
ஆண்டு பிறந்ததடா!
வேண்டும் நலங்கள் விரைவில்கை கூடிட
ஆண்டு பிறந்ததடா!

ஆண்டு பிறந்தது, ஆண்டு பிறந்தது,
ஆண்டு பிறந்ததடா!
அனைவரின் வாழ்விலும் ஆனந்தம் பொங்கிட
ஆண்டு பிறந்ததடா!

அழைக்கும் ரோஜா

வருக வருக என்கிறாய்.
மகிழ்ச்சி பொங்க அழைக்கிறாய்.
அருமை ரோஜா, நீயுமே
அழகுச் சிரிப்பு சிரிக்கிறாய்.

தொட்டுப் பார்க்க மென்மையாய்ப்
பட்டுப் போல இருக்கிறாய்.
மட்டில் லாத வாசனை
வாரி வாரி இறைக்கிறாய்.

கண்ணைக் கவரும் உன்னைநான்
கண்ட வுடனே கொய்யவும்
என்றன் தலையில் அணியவும்
இச்சை கொண்டேன். ஆயினும்,

என்றன் தலையில் வைத்தபின்
எதிரில் காண இயலுமோ?
உன்றன் அழகும் தெரியுமோ?
உனக்கே உயிரும் இருக்குமோ?

எங்களூர் மத்தியிலே - நல்ல
எழில்மிகு சோலையுண்டு.
அங்கொரு கட்டடமாம் - அதன்
அழகினை என்னசொல்வேன்?

சிறுவர் படிப்பதுபோல் - முன்னால்
சிலைகள் இரண்டிருக்கும்.
'வருக, வணக்கம்' என்றே - அங்கே
மற்றோர் சிலை அழைக்கும்.

குழந்தைகள் நூல்நிலையம் - என்று
கொட்டை எழுத்தினிலே
அழகுடன் ஓர்பலகை - நம்
ஆசையைத் தூண்டிவிடும்.

உள்ளே புகுந்ததுமே - காண்போர்
உள்ளம் குளிர்ந்திடுமே.
பிள்ளைகள் அவ்விடத்தை - விட்டுப்
பிரியவும் சம்மதியார்.

கட்டட மத்தியிலே - தூய
கலைமகள் வீற்றிருப்பாள்.
சுற்றுச் சுவரிலெல்லாம் - பல
சுந்தர ஓவியங்கள்!

பஞ்ச தந்திரத்தில் - உள்ள
பற்பல கதைகளுக்கே
நெஞ்சைக் கவருகின்ற - பல
நிகரிலாச் சித்திரங்கள்!

உலகப் புகழுடைய - சில
உயர்ந்த கதைகளுக்கும்
பலப்பல வண்ணங்களில் - அங்கே
பளிச்சென ஓவியங்கள்!

சின்னஞ் சிறுவருக்கே - ஏற்ற
சிறுசிறு நாற்காலி
முன்னால் இருந்திடுமே - நல்ல
மேசைகள், புத்தகங்கள்!

ஆனையும், ஒட்டகமும் - நல்ல
அழகுக் குதிரைகளும்
மானும் மயிலும் உண்டு - யாவும்
மரத்திலே செய்தவையாம்!

ஆனை முதுகினிலே - பல
அற்புதப் புத்தகங்கள்.
ஆனையின் மீதேறி - ஒருவன்
அமர்ந்து படித்திடுவான்.

இப்படி வாகனங்கள் - மேலே
ஏறிப் பலசிறுவர்
அப்படி இப்படியும் - சற்றே
ஆடிப் படித்திடுவார்.

அண்ணன் கதைபடிப்பான் - தம்பி
ஆசையாய்க் கேட்டிடுவான்.
சின்னஞ் சிறுவரிலே - சிலர்
சேர்ந்து படித்திடுவார்.

புல்லிலே ஓர்சிறுமி - சாய்ந்து
புத்தகம் தான்படிப்பாள்.
கல்லிலே ஓர்சிறுவன் - அமர்ந்து
கதைகள் படித்திடுவான்.

சிறுவர்க ளெல்லோரும் - உலகைத்
தெரிந்து கொள்வதற்கே
அறிவு நூல்களெல்லாம் - கதைபோல்
ஆனந்தம் ஊட்டிடுமே!

வண்ணப் படங்களுடன் - பல
வகைவகைப் புத்தகங்கள்
கண்ணைக் கவர்ந்திடுமே - நன்கு
களிப்பினில் ஆழ்த்திடுமே!

சிறுவர்க் குதவிடவே - என்றும்
சிரித்த முகத்துடனே
அருமை தெரிந்தநல்ல - ஓர்
'அக்கா'வும் அங்கிருப்பாள்!

விடுமுறை நாட்களிலே - சிறுவர்
வீட்டை மறந்திடுவார்.
'குடுகுடு' என்றுவந்தே - ஒன்றாய்க்
கூடிப் படித்திடுவார்.

பாட்டிக் கதைகளுடன் - இன்னும்
பற்பல நற்கதைகள்
நாட்டமாய்க் கூறிடுவார் - ஒருவர்
ஞாயிறு மாலையிலே.

எங்களூர் நூல்நிலையம் - போலே
இன்பத் தமிழகத்தில்
எங்கும் அமைந்திடுமோ? - அந்நாள்
என்றுதான் வந்திடுமோ!



அக்டோபர் மாதம் இரண்டினிலே - காந்தி
அவதரித் தார்எனப் போற்றுகிறோம்.
தக்கவி தத்திலே காந்தி மகானுக்குச்
சகலரும் அஞ்சலி செய்திடுவோம்.

காந்தி பிறந்தஇவ் வாரத்தினை - நாமும்
கதர்வார மாகக்கொண் டாடிடுவோம்.
சாந்த வடிவமான காந்திமகான் - ஆன்மா
சாந்தி அடைந்திடச் செய்திடுவோம்.

கையினால் நூற்றது, நெய்ததுவாம் - இந்தக்
கதரை அணிந்திட வேண்டுமென்றே
ஐயனாம் காந்தி உரைத்துவந்தார் - இதை
அகிலம் உணர்ந்திடச் செய்துவந்தார்.

கண்போல் கதரைக் கருதிவந்தார் - அவர்
கைராட்டை யால்தினம் நூற்றுவந்தார்.
உண்ணா விரதம் இருக்கையிலும் - அவர்
ஒருநாளும் நூற்கா திருந்ததில்லை!

சொந்தநம் நாட்டுச் சகோதரர்கள் - இங்கே
சோற்றுக் கில்லாமல் தவிக்கையிலே
அந்நிய நாட்டுத் துணிகளிலே - நாமும்
ஆசைகொள் ளல்மிக மோசம்என்றார்.

"ஏழைக்கு நாமும் உதவுகிறோம் - என்ற
எண்ணத் துடன்கதர் கட்டிடுவோம்.
நாளையே நாடு செழிப்படையும்" - இது
நம்மகான் காந்தியின் பொன்மொழியாம்.

எல்லோரும் சமமென்று காட்டும்உடை
- என்றும்
எளிமையும் கண்யமும் தோன்றும்உடை.
நல்லவர் காந்தி அணிந்தஉடை - இதை
நாமும் அணிந்து நலம்புரிவோம்!



செஞ்சிலுவைச் சங்கம்



இத்தாலி தேசத்துப் போர்க்களமாம் - அதில்
எண்ணற்ற வீரர்கள் மாண்டனராம்.
எத்தனை யோவீரர் காயமுற்றே - அங்கு
இறக்கும் நிலையில் இருந்தனராம்.

கைகள் முறிந்தவர், கால்கள் ஒடிந்தவர்,
கண்கள் இழந்தவர் பற்பலராம்.
'ஐயையோ! அப்பப்பா! அம்மம்மா!' - என்றவர்
அலறி, அலறித் துடித்தனராம்.

தண்ணீர் கிடைக்காத காரணத்தால் - பலர்
சாகக் கிடந்தனர் அவ்விடத்தே.
புண்களை ஆற்ற வழியுமில்லை - அந்தோ!
புழுவாய்த் துடித்தனர் வீரரெல்லாம்.

உள்ளம் உருக்கிடும் காட்சிஇதைக் - கண்டே
உத்தமர் டூனான்டு என்பவரும்
சொல்லொணா வேதனை உற்றனராம் - பிறர்
துன்பம் துடைக்க நினைத்தனராம்.

உதவிக்குப் பலரை அழைத்தனராம் - தினம்
ஊக்க முடனே உழைத்தனராம்.
அதனால், அடிபட்டு வீழ்ந்தவரில் - பல
ஆயிரம் வீரர் பிழைத்தனராம்.

போர்க்களம் தன்னிலே கண்டவற்றை - அவர்
புத்தக மாக எழுதினராம்.
பாரினில் உள்ள அறிஞரெலாம் - அதைப்
படித்ததும் உள்ளம் உருகினராம்.

அண்ணனும் தம்பியும் போலஉலகினில்
அத்தனை மக்களும் வாழ்ந்திடவே,
எண்ணினர்; எழுதினர்; பேசினர்; - பிறருக்கு
எடுத்துக்காட் டாக விளங்கினராம்.

சீரிய ரான அவர்தம் முயற்சியால்
'செஞ்சிலுவைச் சங்கம்' தோன்றியதாம்.
நேரிய வழிகளில் பற்பல தொண்டுகள்
நித்தம் அச்சங்கமே செய்திடுமாம்.

நோயின்றி வாழ்ந்திடச் செய்வதுவும் - பிறர்
நோயுற்ற போதில் உதவுவதும்
நேயமாய் உலகினில் வாழ்வதுவும் - துன்பம்
நீக்கலும் முக்கிய கொள்கைகளாம்.

காந்தி வழி



அன்பு

உத்தம ரில்மிக உத்தமராய் - இந்த
உலகில் உதித்தவர் நால்வரென்போம்.
அத்தகை நால்வரை நல்கியதாம் - நம(து)
ஆசியாக் கண்டமென் றேயுரைப்போம்.

ஏசுவும் நபிகளும் தோன்றியதே - இந்த
ஈடில்லா ஆசியாக் கண்டமென்போம்.
மாசில்லாப் புத்தரும் அன்னார்பின்னே - இந்த
மண்ணிலே காந்தியும் வந்தாரென்போம்.

சித்திரந் தன்னிலும் துயரமதைக் - காணின்
சிந்தை நெகிழ்ந்திடும் காந்திமகான்
இத்தல மக்களின் இன்னல்கள் போக்கிட
ஏற்றநல் அன்பு வழிவகுத்தார்.

இப்பாடல் 1954 ஆம் ஆண்டு காந்தி பிறந்த நாளில் திருச்சி வானொலி நிலையத்தார் ஏற்பாடு செய்த கவி அரங்கத்தில் ஒலி பரப்பப் பெற்றதாகும்.

ஆயிரம் ஆண்டு முன்னால்
அண்ணலார் தோன்றி னாரேல்
மாயமும் செய்தார். அப்பா!
மந்திரம் செய்தார் என்றே
ஆயிரம் கதைகள் கட்டி
அதற்குமேல் கூட்டி நீட்டித்
தூயராம் அவர்தம் வாழ்வைத்
துலக்கமாய் உணரச் செய்யார்.

மந்திர தந்தி ரங்கள்
மாயமோ இல்லை, தம்பி.
இந்திர ஜால மென்னும்
எதுவுமே இல்லை, இல்லை.
விந்தைகள் பலவும் செய்தார்
மிக்கநல் லன்பி னாலே,
தந்தையார் காந்தி யென்றே
தரணியோர் போற்று கின்றார்.

வெட்டியே தலையை வீழ்த்தல்
வீரமாம் என்றார் வீணர்.
சுட்டுமே உடலை வீழ்த்தல்
சூரமாம் - வெறியர் சொன்னார்.

எட்டவே பறந்து குண்டை
　　எறிந்துநா டெரியச் செய்யும்
துட்டர்கள் இடையே அன்பைச்
　　சுரந்தனர் காந்தி அண்ணல்.

பண்டையக் கற்கா லத்தார்
　　பார்த்திடின் நகைக்கும் வண்ணம்
சண்டைமேல் சண்டை யிட்டு
　　மக்களைச் சாம்ப லாக்கக்
குண்டுமேல் குண்டு வீசும்
　　கொடியவர் வாழும் நாளில்
அன்புதான் உலகை வெல்லும்
　　ஆயுதம் என்றே சொன்னார்.

வீடுகள் மனைவி மக்கள்
　　விளைநிலம் எல்லாம் நீத்துக்
காடுகள் மலைகள் சென்றே
　　கடுந்தவம் செய்தி டாமல்
நாடெலாம் சுற்றிச் சுற்றி
　　நலிந்தவர் துயரம் தீர்த்தார்
ஏடெலாம் ஏத்தும் இந்த
　　ஈடிலா அன்பு வள்ளல்.

பிறப்பினால் உயர்வு தாழ்வைப்
பிறப்பிக்கும் கூட்டத்தாரைத்
திருத்தவே ஐயன் செய்த
தியாகமே அன்பைக் காட்டும்.

திருக்குறள் அறத்துப் பாலின்
திருவுரு இவர்தாம் என்றே
ஒருமுறை யல்ல; இங்குப்
பலமுறை உரைக்கின் றேனே!

அரசியல் கோட்டைக் குள்ளே
அன்பினால் புரட்சி செய்தார்.
உரியவ ரிடத்தே நாட்டை
ஒப்படைத் திடவே செய்த
திறனதை அறிந்து மற்றத்
தேசத்தார் போற்று கின்றார்.
அறநிலை தவறா ஐயன்
அன்பினை என்னென் பேனே!

அன்புதான் கடவுளென்றே
அனுதினம் உணர்த்தி வந்தார்.
அன்புதான் பகைமைத் தீயை
அணைத்திடும் வெள்ள மென்றார்.

அன்புதான் உள்ளத் துள்ள
அழுக்கெலாம் களையு மென்றார்.
அன்புதான் அகிம்சைப் போரின்
ஆயுதம் என்றும் சொன்னார்!

ஃ ஃ ஃ

அண்ணலார் காந்தி அன்பினைப் பற்றி
அருளிய மொழிகள் அளவில. அவற்றுள்
சிற்சில வற்றைச் செவிமடுப் பீரே:

முத்திரை நாணயம் முன்புறம் பின்புறம்
என்றிரு புறங்கள் கொண்டதாம். அதுபோல்
வாழ்வெனும் நாணயம் வாய்மையும் அன்பும்
கொண்டதாய் இருப்பின் குறையெதும் இல்லை.

வெள்ளையன், கறுப்பன்
வேற்றுமை எதற்கு?
ஹரிஜனன், ஏழை
அவன்குலம் தாழ்வு
என்றெலாம் கூறுதல்
ஏற்புடைத் தன்று.
உலகமே குடும்பம்,
உயிரெலாம் உறவே.
இவ்வழி அன்பின்
எழிலினைக் காண்போம்!

தாய்ப்பால் இன்றித் தவிக்கும் குழந்தைகள்
பரிவுடன் அருந்தப் பாலினைச் சுரந்தும்
உழுதிடக் காளைகள் உவந்தே நல்கியும்
அறத்தினை வளர்த்தே அவனியில் விளங்கும்
பசுவினைக் கொல்லுதல் பாரினில் நிலவும்
அன்பையே கொல்லுதல் ஆகும் அல்லவோ?

o o o

பிள்ளை பெண்டு யாவரும்
உள்ளம் ஒன்றி வாழவே
கள்ளொ ழிக்கச் செய்ததே
காந்தி யாரின் அன்புதான்!

'தொடுதல் தீட்டு' என்பதும்
தொலைவில் ஒதுக்கி வைப்பதும்
கெடுதல் கெடுதல் என்றதே
கேட்பீர், காந்தி அன்புதான்!

வேற்று நாட்டுப் பொருள்களை
விலக்கி, ஏழை உய்யவே
நாட்டுத் தொழிலை வளர்த்ததே
நமது காந்தி அன்புதான்!

இந்து - முஸ்லிம் சண்டையில்
இருவர் நலனும் கருதியே
சொந்த உயிரைக் கொடுக்கவும்
துணிந்த தவரின் அன்புதான்!

குண்டு தன்னை வீசியே
கொல்ல வந்தான் அவனையும்
மன்னித் தாரே - அதுவுமே
மகிமைக் காந்தி அன்புதான்!

ஃ ஃ ஃ

தோழர்க ளிடத்தும் அன்பு!
தொண்டர்க ளிடத்தும் அன்பு!
ஏழைக ளிடத்தும் அன்பு!
எதிரிக ளிடத்தும் அன்பு!
கோழைக ளிடத்தும் அன்பு!
கொலைஞர்க ளிடத்தும் அன்பு!
வாழைபோல் உதவி அன்பை
வளர்த்தனர் காந்தி அண்ணல்!

ஏழைச்சிறுவன்

காசே இல்லை கையிலே.
களிப்பும் இல்லை மனத்திலே.
ஆசை மட்டும் இருக்குதே!
அதனால் எதனை வாங்கலாம்?

பட்டுச் சொக்காய் அணியவும்,
பட்ச ணங்கள் தின்னவும்
பட்டாஸ் வாங்கிக் கொளுத்தவும்
பாழும் ஆசை தூண்டுதே!

தெருவில் உள்ளோர் யாவரும்
சிரித்தே ஆடித் திரிகையில்,
ஒருவன் மட்டும் மூலையில்
ஒதுங்கி இருந்து அழுவதோ?

அரக்கன் அழிந்த நாளென
ஆடிப் பாடிப் போற்றுவோர்
வறுமை என்னும் அரக்கனை
வாழ விடுதல் நீதியோ?

கதைப் பாடல்கள்

ஆமையாரின் அவசரம்





பையன்

ஆமையாரே, ஆமையாரே,
எங்கே போகிறீர்?
அவசரமாய்ப் போகிறீரோ,
சொல்லுமே ஐயா.

ஆமையார்

அருமையுள்ள பேரனுக்குத்
திருமணம் என்றே
அவசரமாய்த் தந்திஒன்று
வந்த தப்பனே.

பையன்

வண்டி கட்டிச் சென்றி ருந்தால்
வசதி யாகுமே?

ஆமையார்

வண்டி மாடு படுத்துக் கொண்டால்
நேர மாகுமே!

பையன்

காரில் ஏறிச் சென்றி ருந்தால்
காற்றாய்ப் பறக்குமே?

ஆமையார்

காட்டு வழியில் நின்று விட்டால்
மோச மாகுமே!

பையன்

ரயிலில் ஏறிச் சென்றி ருந்தால்
நன்மை யாகுமே?

ஆமையார்

நடுவ ழியில் கவிழ்ந்து போனால்
நாச மாகுமே!

பையன்

சரி, சரி என் சைக்கிள் பின்னால்
ஏறிக் கொள்ளுவீர்.
சரச ரென்றே ஓட்டிடுவேன்
விரைவில் செல்லுவீர்.

ஆமையார்

(என்ன! ஒரு சைக்கிளிலே! இரண்டு பேர் போவதா? ஐயையோ! வேண்டாம், வேண்டாம்)

போலீஸ்காரர் பிடித்துக் கொள்வார்
இரண்டு பேரையும்.
போதும், போதும், நடந்தே செல்வேன்.
வணக்கம் அப்பனே!

('சைக்கிளில் ஒருவர்தான் போகலாம்' என்ற சட்டம் இருந்தபோது எழுதப் பெற்றது இப்பாடல்.)

பையன்

பச்சைக் கிளியே, என்னிடம்
பறந்தே ஓடி வா, வா.
அச்சம் ஏனோ கொள்கிறாய்?
அருகில் ஓடி வா, வா.

பச்சைக் கிளி

வேண்டாம், அங்கே வந்திட
விருப்ப மில்லை போ, போ.
கூண்டில் போடப் பார்க்கிறாய்
கொடிய பையா! போ, போ.

பையன்

இல்லை, இல்லை, நானுமே
நல்ல பையன், வா, வா.
தொல்லை ஏதும் தந்திடேன்.
சொல்லை நம்பி வா, வா.

பச்சைக் கிளி

வேலையற்ற பையனே,
வேண்டாம், உடனே போ, போ.
சோலை நோக்கி நானுமே
செல்ல வேண்டும் போ, போ.

பையன்

பழங்கள் நிறையத் தருகிறேன்!
பசியைத் தீர்க்க வா, வா.
துளியும் கெடுதல் செய்திடேன்.
துணிந்தே அருகில் வா, வா.

பச்சைக் கிளி

பறந்து சென்று வேண்டிய
பழங்கள் தின்பேன் போ, போ.
பிறரின் கையைப் பார்த்துநான்
பிழைப்ப தில்லை போ, போ.



உழுத வயலில் அழகனும்
உமியை விதைத்து வைத்தனன்.
முளையும் கிளம்ப வில்லையே;
மூன்று மாதம் ஆனதே!

உழுத வயலில் அரிசியை
ஓடி ஓடி விதைத்தனன்.
முளையும் கிளம்ப வில்லையே;
மூன்று மாதம் ஆனதே!

உழுத வயலில் அரிசியும்
உமியும் சேர்ந்த நெல்லையே
அழகன் விதைத்து வைத்தனன்.
அதுவும் வீணாய்ப் போகுமோ?

இல்லை, இல்லை. முளையுமே
எழும்பி மேலே வந்தது.
பல்லைக் காட்டி அழகனும்
பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனன்.

படிப்பு மட்டும் போதுமோ?
பண்பும் வேண்டும் அல்லவோ?
படிப்பும் பண்பும் சேரவே,
பலன்கள் நன்கு விளையுமே!



எலியும் பூனையும்

(வளைக்குள் இருக்கும் எலிக்கும் வெளியில் நிற்கும்
பூனைக்கும் நடக்கும் உரையாடல்)

பூனை - எலியம்மா, எலியம்மா,
எட்டிப் பாரம்மா.
இனிமை யான பண்டம் இங்கே
இருக்கு தேஅம்மா.

எலி - பூனையாரே, பூனையாரே,
என்ன பண்டமோ?
போளி, அல்வா, பூந்தி என்று
புரியச் சொல்லுமே!

பூனை - வளையை விட்டு வெளியில் வந்தால்
தெரிந்து கொள்ளலாம்.
வாய்க்கு இனிய பண்டம் இதனை
உண்டு மகிழலாம்.

எலி - பொந்து வழியாய் அந்த இனிப்புப்
பண்டந் தன்னையே
போட்டு விட்டுப் போக லாமே!
பூனை நண்பரே.

பூனை - என்ன செய்வேன்? இந்தப் பொந்தோ
சின்னஞ் சிறியது.
என்னி டத்தில் இருக்கும் பண்டம்
மிகவும் பெரியது.

எலி - பிட்டுப் பிட்டுச் சிறிது சிறிதாய்
எனது வளையிலே
போட்டு விட்டுப் போக லாமே
பூனை நண்பரே.

பூனை - கல்லைப் போலக் கடின மாகப்
பண்டம் இருப்பதால்,
கடித்துக் கொறிக்கும் சக்தி உன்போல்
எனக்கும் இல்லையே!

எலி - இல்லை யானால், தொல்லை யில்லை.
வளையின் வாயிலே
இனிப்புப் பண்டம் அதனைப் போட்டுச்
செல்வீர் நண்பரே.

பூனை - வளையின் அருகே போட்டுச் சென்றால்
என்ன ஆகுமோ?
வட்ட மிட்டுத் திரியும் காகம்
விட்டு வைக்குமோ?

எலி - ஆசை காட்டி மோசம் செய்யும்
அற்பப் பூனையே,
அசடு நானும் அல்ல, அல்ல.
அறிந்து கொள்ளுவாய்.

பூனை - அடடா. இதுபோல் நீயும் என்னை
நினைக்க லாகுமோ?
அருமை யான பண்டந் தன்னை
மறுக்க லாகுமோ?

எலி - இனிப்பை நானும் தின்ப தற்கோ
வருந்தி அழைக்கிறாய்?
இல்லை. இல்லை. என்னைப் பிடித்துத்
தின்னப் பார்க்கிறாய்.

உலகில் உள்ள பண்டம் யாவும்
கிடைப்ப தாயினும்,
உயிரைக் கொடுக்க உலகில் எவரும்
துணிந்து வருவரோ?

வளையை விட்டே உனது வயிற்றில்
வந்து சேர்ந்திட
மடையனல்ல. வழியைப் பார்த்து
நடையைக் கட்டுவாய்!



என்ன வேண்டும்

எங்கள் பள்ளியின் முன்னாலே
இருந்தது சிறிய கடைஒன்று.

அந்தக் கடையில் புதிதாக
அன்றொரு பொம்மை இருந்ததனால்,

அதனைப் பார்க்க மாணவர்கள்
அங்கே கூட்டம் போட்டனரே.

நந்தன், கோபு, சாம்புவுடன்
நானும் சென்றேன் கடைமுன்னே.

“வேண்டிய தென்ன? சொல்லிடுவீர்.
வீணாய்க் கூட்டம் போடாதீர்”

என்றே அந்தக் கடைக்காரர்
எங்களைப் பார்த்துக் கூறினரே.

பையில் ஒருகா சில்லாமல்
பார்த்துக் கொண்டே நாங்களுமே,

அங்கே நின்றோம். அச்சமயம்,
அவசர மாக ஒருபையன்

ஓடி வந்தான், அவன்கையை
உற்றுப் பார்த்தார் கடைக்காரர்.

வந்தவன் கையில் ஒருரூபாய்
வட்ட மாக இருந்திடவே,

"வெட்டிக் கூட்டம் போடாமல்
விலகிப் போங்கள், கழுதைகளா!"

என்றே கூறிக் கோபமுடன்
எங்களைப் பிடித்துத் தள்ளியபின்,

பணத்துடன் வந்த பையனையே
பரிவுடன் அருகில் வரவேற்றே,

"என்னடா தம்பி வேண்டும்?" என
இதமாய்க் கேட்டார் கடைக்காரர்.

பணத்தைப் பையன் நீட்டினனே;
பக்குவ மாகக் கூறினனே;

"அவசரம், அவசியம், ஆனதனால்,
அப்பா இங்கே அனுப்பினரே.

சில்லறை வேண்டும் ரூபாய்க்கு;
சீக்கிரம் தருவீர் இப்பொழுதே”

இதனைக் கேட்ட நாங்களெல்லாம்
இடிஇடி யென்றே சிரித்தோமே!

ஏமாற் றத்தால் கடைக்காரர்
எங்களைப் பார்த்து முறைத்தாரே!



என்ன நடக்குமோ?

ஐந்து பூனைக் குட்டிகள்
அணி வகுத்துச் சென்றன.
வெய்யில் கொளுத்தும் வேளையில்
வேக மாகப் போயின.

கடுக டுத்த முகத்துடன்
காலை எட்டிப் போட்டன.
படை யெடுக்கும் வீரர்போல்
பாய்ந்து பாய்ந்து சென்றன.

வேலைப் போல இருக்குமாம்
மிகவும் கூர்மை யாகவே
காலில் உள்ள நகங்களைக்
காட்டிக் கொண்டே சென்றன.

மீசை துடித்து நிற்கவே,
வியர்வை நன்கு சொட்டவே,
தூசி எங்கும் பறக்கவே
துரித மாகச் சென்றன!

கண்கள் இரண்டும் சிவக்கவே,
காதும் நிமிர்ந்து நிற்கவே
என்ன கோபம், கோபமோ!
எங்கே அவைகள் போகுமோ!

சீன வெடியைக் கொளுத்தியே
சின்னப் பூனைக் குட்டிமேல்
சீனு போட்டு விட்டதால்
தேம்பித் தேம்பி அழுததாம்.

அண்ணன் மாரி டத்திலே
அழுது கொண்டே வந்ததாம்.
கண்ணீர் வழிய நடந்ததைக்
கலக்கத் தோடே சொன்னதாம்!

கேட்ட வுடனே அண்ணன்மார்
கிளம்பி விட்டார்; சீனுவின்
வீட்டைத் தேடிச் செல்கிறார்.
மேலே என்ன நடக்குமோ?

இரண்டு மாத விடுமுறையும்
இனிமை யாகக் கழிந்ததுவே.

பள்ளிக் கூடம் திறந்ததுவே,
பரீட்சை முடிவும் தெரிந்ததுவே.

‘எட்டாம் வகுப்பைக் கடந்தோம்நாம்.
இனிமேல் பயமே இல்லை’யென

எண்ணிக் கொண்டே வீடடைந்தேன்,
என்றும் இல்லா மகிழ்வுடனே.

ஃ ஃ ஃ

மறுநாள் பள்ளி செல்லுகையில்,
வழியில் உள்ள கடைதனிலே,

கண்டேன், அழகிய புத்தகமே,
காசைக் கொடுத்து வாங்கினனே.

வாங்கிப் படித்துக் கொண்டேநான்
மகிழ்வுடன் பள்ளி வந்தடைந்தேன்.

வகுப்பில் நுழைந்தேன், அங்கும்நான்
மற்றவ ருடனே பேசாமல்,

கதையைப் படிப்பதில் என்னுடைய
கவனம் முழுவதும் செலுத்தினனே.

கலகல என்ற சிரிப்பொலிதான்
காதில் விழுந்தது, உடனேநான்,

'ஏனோ மாணவர் சிரிக்கின்றார்?'
என்றே நிமிர்ந்து பார்க்கையிலே,

என்னைப் பார்த்தே சிரித்தார்கள்.
என்பதை உடனே நானறிந்தேன்,

விஷயம் புரிந்தது. புரிந்ததுமே
வெட்கங் கொண்டேன். எதனாலே?

கதையைப் படிப்பதில் மாத்திரமே,
கவனம் செலுத்திச் சென்றதனால்,

எட்டாம் வகுப்பில் திரும்பவும்நான்
இருப்பதை அறிந்தேன், அடடாவோ!

படித்துத் தேறியும் முன்போலப்
பழைய வகுப்பில் நுழைந்ததனை

எண்ணி ஓட்டம் பிடித்தேனே,
எனது வகுப்பை அடைந்தேனே!

கருப்பன் பச்சைக் கிளியொன்றைக்
காட்டில் பிடித்து வந்திட்டான்.
அறுத்து விட்டான் சிறகுகளை,
அடைத்து வைத்தான் கூண்டினிலே.

தினமும் கருப்பன் பழங்களெலாம்
தின்னக் கொடுப்பான். ஆனாலும்,
மனத்தில் வருத்தம் கொண்டதுவே.
வாழ்வும் கசந்து போனதுவே.

கருப்பன் ஒருநாள் அக்கூண்டின்
கதவைத் திறந்தான். ஆனாலோ,
இறுக்கிச் சரியாய் மூடாமல்
எங்கோ விரைந்து போய்விட்டான்.

அலகால் கிளியும் அக்கூண்டை
அசைத்தே ஆட்டித் திறந்ததுவே.
உலகில் சுதந்திர மூச்சுடனே
உயரப் பறக்கக் கிளம்பியதே.

அறுத்து விட்ட சிறகுகளோ
அதற்குள் எப்படி முளைத்துவிடும்?
பறந்து செல்ல முடியாமல்
பட்டெனத் தரையில் வீழ்ந்ததுவே!

கீழே கிடந்த அக்கிளியைக்
கிழித்துக் கடித்துக் கொன்றிடவே,
பாழும் பூனை ஒன்றங்கே
பாய்ந்தே ஓடி வந்ததுவே!

கண்ணன் என்பவன் இக்காட்சி
கண்டதும் உடனே பூனைதனைக்
குண்டாந் தடியால் விரட்டினனே;
கொஞ்சும் கிளியைக் காத்தனனே.

கருத்துடன் சிலநாள் வளர்த்தனனே
கண்ணன் அந்தக் கிளிதனையே.
சிறகுகள் நன்றாய் வளர்ந்தனவே;
தெம்புடன் பறக்க முடிந்ததுவே.

காலையில் ஒருநாள் அக்கிளியைக்
கண்ணன் கையில் எடுத்தனனே.
சோலையை நோக்கிச் சென்றனனே.
சுகமாய்த் தடவிக் கொடுத்தனனே.

“கொடுமைகள் இனிமேல் உனக்கில்லை.
கூண்டில் வாழ்வதும் இனியில்லை.
விடுதலை பெற்றுப் பறந்திடுவாய்.
வேண்டும் இடங்கள் சென்றிடுவாய்.”

உரைத்தனன் இப்படி, அக்கிளியை
உயரப் பறக்க விட்டனனே.
பறந்திடும் கிளியை வெகுநேரம்
பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனனே.

அரைமணி நேரம் ஆனதன்பின்
அடைந்தனன் கண்ணன் தன்வீட்டை.
விரைவாய்ப் பல்லைத் துலக்கினனே;
முகம்கால் கைகள் கழுவினனே.

துண்டால் முகத்தைத் துடைக்கையிலே,
தொப்பென ஏதோ வீழ்ந்ததுவே!
கண்ணனின் கண்கள் எதிரினிலே
கண்டன ஆப்பிள் பழம்ஒன்றை!

உடனே நிமிர்ந்து பார்த்தனனே.
“ஓகோ, நமது கிளியேதான்!
அடடே, நமக்குப் பரிசாக
ஆப்பிள் தந்தது” எனமகிழ்ந்தான்.

கண்ணன் அருகில் அக்கிளியும்
களிப்புடன் நெருங்கி வந்ததுவே.
அன்புடன் அதனைக் கண்ணனுமே
அணைத்துக் கொஞ்சி மகிழ்ந்தனனே!

இன்றும் அக்கிளி கண்ணனிடம்
இனிக்கும் ஆப்பிள் பழத்துடனே
நன்றி செலுத்த வருவதனை
நானும் அறிவேன், நண்பர்களே!



கடலின் ஆழம்...?



காட்டை விட்டுக் குள்ள நரியும்
வெளியில் வந்ததாம்.
கடலைப் பார்க்க வேண்டு மென்றே
ஆசை கொண்டதாம்.
காற்று வீசும் கடற்க ரைக்கு
வந்து சேர்ந்ததாம்.
கரையில் நின்ற படியே கடலை
உற்றுப் பார்த்ததாம்.

“கடலின் ஆழம் அதிக மென்றே
எனது பாட்டனார்
கதைகள் சொல்லும் போதே எனக்குச்
சொல்லி யிருக்கிறார்.
கடலின் ஆழம் என்ன வென்றே
இந்த நேரமே
கணக்காய் நானும் அளந்து சொல்வேன்”
என்று ரைத்ததாம்.

தண்ணீர் அருகே சென்று நரியும்
நின்று கொண்டதாம்.
தனது வாலை மெள்ள மெள்ள
உள்ளே விட்டதாம்.
தண்ணீ ருக்குள் வாலை முழுதும்
விட்ட வுடனேயே
தரையும் அந்த வாலின் நுனியில்
தட்டுப் பட்டதாம்.

“கடலின் ஆழம் எனது வாலின்
நீளம் தானடா!
கண்டு பிடித்து விட்டே” னென்று
துள்ளிக் குதித்ததாம்.
“அடடா, ‘மிகவும் ஆழம்’ என்று
சொல்லும் கடலையே,
அளந்து விட்டேன்” என்றே பெருமை
அளக்க லானதாம்!



ரத்தின புரியின் அரசனுக்கே
எத்தனை மனைவியர்? அப்பப்பா!
மொத்தத் தொகையைச் சொல்லிடவா?
முன்னூற் றறுபத் தைந்தாகும்!

மனைவியர் தனித்தனி வாழ்ந்திடவே
மாளிகை பலவும் கட்டிவைத்தான்.
தினமும் ஒருத்தியின் மாளிகையில்,
திருப்தி யாகச் சாப்பிடுவான்.

ஒவ்வொர் ஆண்டும் ஒருநாள்தான்
உண்பான் ஒருத்தியின் மாளிகையில்.
இவ்விதம் சென்றன மூன்றாண்டு.
இனிமேல் நான்காம் ஆண்டாகும்.

அந்த ஆண்டின் கடைசிதினம்
அரசனை எந்த மனைவியுமே
வந்தே அழைக்கா திருந்ததனால்
வாட்டம் கொண்டே அவனிருந்தான்.

அன்று முழுதும் பட்டினிதான்.
“அந்தோ, இப்படி ஆனதுவே!
என்னே காரணம்?” என்றவனும்
எண்ணிப் பார்த்தான்; புரிந்ததுவே.

அந்த வருடம் லீப்வருடம்
அதனால் ஒரு நாள் அதிகமன்றோ?
எந்த மனைவியின் முறையென்றே
எவரும் அறியா திருந்தனராம்!

சாது வான நமது காந்தி
    தமது அறையி னுள்ளே
ஏதோ ஒன்றைத் தேடித் தேடி
    இங்கு மங்கும் பார்த்தார்.

ஆர்வ மாக அந்த அறையை
    அலசிப் பார்க்க லானார்.
கூர்ந்து மூலை முடுக்கு யாவும்
    குனிந்து பார்த்தும் காணோம்!

அறையி னுள்ளே சீடர் ஒருவர்
    அந்தச் சமயம் வந்தார்.
“சிரமப் பட்டே எந்தப் பொருளைத்
    தேடு கின்றீர்?” என்றார்.

“சின்னப் பென்சில் ஒன்றை நானும்
    தேடு கின்றேன் இங்கே.
என்னை அதுவும் ஏய்த்து விட்டே
    எங்கே சென்ற” தென்றார்.

சட்டைப் பையில் கையை விட்டுச்
சட்டென் றந்தச் சீடர்
நெட்டைப் பென்சில் ஒன்றை எடுத்து
நீட்டி னாரே முன்னால்.

“நெட்டைப் பென்சில் எனக்கு வேண்டாம்
நீரே வைத்துக் கொள்ளும்.
குட்டிப் பென்சில் அதனை நானும்
விட்டுப் பிரிய லாமோ?”

இந்த வார்த்தை கூறி, காந்தி
இங்கு மங்கும் தேட,
அந்தச் சீடர் என்ன செய்தார்?
அவரும் தேட லானார்!

பாடு பட்டுத் தேடி, காந்தி
பலனைக் கண்டு விட்டார்!
“தேடிப் பார்த்த பென்சில் கையில்
சிக்கிக் கொண்ட” தென்றார்.

சிரமம் கொடுத்த பென்சில் தன்னைச்
சீடர் உற்றுப் பார்த்தார்.
சரியாய் ஒன்றே அங்குலம்தான்!
சற்றும் பெரிதாய் இல்லை!

பொக்கை வாயைத் திறந்து காந்தி
புன்சி ரிப்பு சிரித்தார்.
“மிக்க நல்ல பென்சில் இதனை
விடவே மனமும் வருமோ?

சென்னை நகரில் இருந்த போது
சின்னப் பையன் ஒருவன்,
அன்ப ளிப்பாய்த் தந்த திந்த
அருமைப் பென்சில்!” என்றார்.



‘இந்தியன் ரெவ்யூ’ என்ற பத்திரிகையை நடத்தியவரும், பொது வாழ்வில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவருமாகிய காலஞ் சென்ற ஜி. ஏ. நடேசன் அவர்களின் புதல்வனே அந்தச் சிறுவன்.

காசிக்குத் தாத்தாவும் சென்றுவந்தார் - உடன்
களிப்போடு பிள்ளைகள் சூழ்ந்துகொண்டார்.
ஆசையாய்க் கூடியே பேசுகையில் - அங்கே
ஆனந்தன் தாத்தாவைக் கேட்கலுற்றான்.

"அத்தையும் காசிக்குச் சென்றுவந்தாள் - இனி
அவரைக்காய் தின்பதே இல்லையென்றாள்.
சித்தப்பா காசிக்குச் சென்றுவந்தார் - இனி
சிகரெட் பிடிப்பதே இல்லையென்றார்.

பாட்டியும் காசிக்குச் சென்றுவந்தாள் - இனி
பாகற்காய் தின்பதே இல்லையென்றாள்.
சீட்டாடும் பழக்கத்தை விட்டேனென்றார் - காசி
சென்று திரும்பிய மாமாவுமே.

இப்படிக் காசிக்குச் சென்றோரெல்லாம் - அங்கே
ஏதேனும் ஒன்றினை விட்டுவந்தார்.
அப்படி நீயுமே விட்டதென்ன? - தாத்தா.
அவசியம் கூறிட வேண்டு"மென்றான்.

"கோபக்காரன் என்றே ஊரிலுள்ளோர்-என்னைக்
கூறிடு வாரன்றோ? ஆதலினால்,
கோபத்தைக் காசியில் விட்டுவந்தேன்" - என்றே
கூறினர் மறுமொழி தாத்தாவுமே.

கண்ணனும் உடனேயே, "தாத்தா, தாத்தா நீயும்
காசியில் விட்டதும் என்ன?" என்றான்.
"இந்நேரம் கோபத்தை விட்டதாய்ச் சொன்னேனே.
எங்கே கவனமோ?" என்றுரைத்தார்.

முரளியும், "தாத்தா, நீ விட்டதென்ன?" - என்றே
மீண்டும் ஒருமுறை கேட்டிடவே.
திரும்பவும், "கோபத்தை விட்டே" னென்றே-தாத்தா
செப்பினர். முரளியும், "ஓகோ" என்றான்.

அருணனும் கோபுவும் அழகப்பனும் - இன்னும்
அலமுவும் கீதா காவேரியுமே
திரும்பத் திரும்பஇக் கேள்விதனைக் - கேட்கச்
சீறி எழுந்தனர் தாத்தாவுமே!

"வேலையற்ற வெட்டிப் பிள்ளைகளா - என்ன
வேடிக்கையா இங்கே காட்டுகிறீர்?
தோலை உரித்தே எடுத்திடுவேன்" - என்று
சொல்லியே கையில் தடிஎடுத்தார்.

"கோபத்தைக் காசியில் விட்டேனென்றார் - இதோ
குண்டாந் தடியுடன் வந்ததடா!
ஆபத்து! ஆபத்து!" என்றே சொல்லி - உடன்
அனைவரும் ஓட்டம் பிடித்தனரே!

மனித வேட்டை



காட்டில் உள்ள மிருகமெலாம்
　　கூட்டம் ஒன்றைக் கூட்டினவாம்.
வேட்டைக் காரர் தொல்லைகளை
　　விவர மாகப் பேசினவாம்.

“துப்பாக் கியினால் நம்மையெலாம்
　　சுட்டுக் கொல்லும் மனிதர்களை
இப்போ தேநாம் பழிவாங்க
　　எழுந்திடு வோம்” எனப் புலிசொல்ல,

“இப்படி வாயால் பேசிடுதல்
　　எளிதே. ஆனால், மனிதர்களை
எப்படிப் பழிநாம் வாங்குவதோ?”
　　என்றே சிங்கம் கேட்டிடவே

குள்ள நரியும் முன்வந்தே
　　கூற லானது சபைதனிலே:
“நல்ல யோசனை ஒன்றுண்டு.
　　நான்இப் பொழுதே கூறிடுவேன்.

கரடி, சிங்கம், புலியுடனே
காட்டில் உள்ள மிருகமெலாம்
அருகில் உள்ள நகருக்குள்
அதிகா லையிலே புகுந்திடலாம்.

தூங்கி எழுந்து மனிதரெலாம்
சோம்பல் முறிக்கும் வேளையிலே
வேங்கை போலே நாமெல்லாம்
'விர்'ரெனப் பாய்ந்து கொன்றிடலாம்.

ஆளுக் கொருவரை நாம்கொன்றால்
அப்புறம் மனிதர் யாரிருப்பார்?
நாளைக் காலையே கிளம்பிடலாம்.
நமக்குக் கவலை இனியில்லை."

நரியின் பேச்சைக் கேட்டதுமே,
"நல்லது. யோசனை நல்ல" தெனக்
கரடி சிங்கம் புலிகளெலாம்
களிப்பாய் ஏற்றுக் கொண்டனவே.

மறுநாள் காலை மணிஇரண்டு.
வந்தன மிருகம் யாவையுமே.
திரண்டு கிளம்பிச் சென்றனவே,
திமுதிமு வென்றே நகர்நோக்கி.

விடியும் நேரம் நகர்அருகே
விரைந்தே அவைகள் செல்லுகையில்
இடிஇடி யென்றே பெரும்சப்தம்
எழுந்தது காதும் அதிர்ந்திடவே!

சப்தம் கேட்டதும் மிருகமெலாம்
சட்டென நின்றன பயத்துடனே.
"எப்படி நாமும் வருவதனை
இந்த மனிதர்கள் அறிந்தனரோ?

துப்பாக் கியினால், ஐயையோ,
சுடுகின் றார்கள் வருமுன்னே!
தப்பிப் பிழைக்க வேண்டுமெனில்,
சடுதியில் திரும்பி ஓடிடுவீர்!

உள்ளே சென்றால் ஆபத்து!
ஓடுவீர், ஓடுவீர்" என்றங்கே
குள்ள நரியும் நடுநடுங்கிக்
கூறிய வுடனே, மிருகமெலாம்

ஓட்டம் பிடித்தன காட்டிற்கே
ஒருநொடி கூட நில்லாமல்!
காட்டு மிருகம் அனைத்தையுமே
கலக்கிய சப்தம் அறிவீரோ?

சிறுவர்க ளெல்லாம் மகிழ்வுடனே
தீபா வளியாம் அந்நாளில்,
தெருக்களி லெங்கும் பட்டாஸ்கள்
சேர்ந்து கொளுத்திய சப்தம்தான்!



பரிட்சை முடிவு



சோமு, சுந்தர் இருவரும்
தோழ ராக இருந்தனர்.
சோமு நன்கு படிப்பவன்.
சுந்தர் மிகவும் மண்டுதான்!

வருட முடிவுப் பரீட்சையும்
வந்து விட்ட தாகையால்,
இரவும் பகலும் மாணவர்
இடைவி டாமல் படித்தனர்.

அன்று காலை சோமுவை
அழைத்துச் சுந்தர் கூறினன்:
“இன்று நடக்கும் பரீட்சையில்
எனக்கு நீயும் உதவுவாய்.

பார்த்தே எழுதக் காட்டினால்,
பரீட்சை தன்னில் தேறுவேன்.
சேர்ந்தே அடுத்த வகுப்பிலும்
சென்று நாமும் படிக்கலாம்”

சுந்தர் இதனைச் சொன்னதும்
சோமு தலையை ஆட்டினன்.
அந்த விதமே செய்திட
அவர்கள் திட்டம் போட்டனர்.

சோமு முன்னால் இருந்தனன்.
சுந்தர் பின்னால் அமர்ந்தனன்.
சோமு விடைகள் எழுதியே
சுந்தர் பார்க்க வைத்தனன்.

பார்த்துப் பார்த்து சுந்தரும்
பரீட்சை முழுதும் எழுதினன்.
தேர்ச்சி பெறுவோம் என்றனர்.
திருப்தியோடு திரும்பினர்.

பள்ளிக் கூடம் திறந்ததும்,
பரீட்சை முடிவை அறியவே,
துள்ளி ஓடி வந்தனர்,
சோமு சுந்தர் இருவரும்.

பள்ளி முன்னால் தொங்கிய
பலகை காணப் பலரையும்
தள்ளிக் கொண்டு சென்றனர்;
தங்கள் பேரைத் தேடினர்.

சுந்தர் தேர்ச்சி பெற்றனன்.
சோமு தோற்று விட்டனன்!
இந்த முடிவைக் கண்டதும்
ஏங்கிச் சோமு துடித்தனன்.

அந்தச் சமயம் அவனையே
அழைத்தார் பள்ளித் தலைவரும்.
வந்து நின்ற அவனிடம்
வார்த்தை கூற லாயினர்:

"சுந்தர் என்ற பையனைத்
துணிந்து பார்த்து எழுதியே
இந்தப் பரீட்சை தேறலாம்
என்று கோட்டை கட்டினாய்.

ஊரை ஏய்க்கப் பார்த்திடும்
உன்றன் எண்ணம் பலிக்குமோ?
யாரை ஏய்க்க நினைப்பினும்
என்னை ஏய்க்க முடியுமோ?"

கெட்டிக் காரச் சோமுவோ
கேட்டான் இந்தச் சொற்களை.
தட்டிக் கூற எண்ணினன்.
தவறோ அவனைத் தடுத்தது!

"கெட்ட சுந்தர் பேச்சினால்
கெட்டேன்; தாயும் தந்தையும்
பட்ட பாடு யாவுமே
பயனில் லாமல் போயின."

என்று சோமு எண்ணினன்;
எண்ணி ஏக்கம் கொண்டனன்;
கண்ணீர் சொரிய லாயினன்;
கால்கள் சோரத் திரும்பினன்.

(கிரேக்க மன்னன் ஒருவனுக்கும் ஒரு வேதாந்திக்கும் நடக்கும் உரையாடல்)

மன்னன் - எகிப்து நாட்டை எதிர்த்துநான்
இன்றே செல்வேன் படையுடன்.
மகிமை பெருக வெல்லுவேன்.
மகிழ்ச்சி பொங்கத் திரும்புவேன்.

வேதாந்தி - அப்புறம்...?

மன்னன் - பார சீக நாட்டிலே
படையெடுத்துச் செல்லுவேன்.
வீரப் போரை நடத்துவேன்.
வெற்றிக் கொடியை நாட்டுவேன்!

வேதாந்தி - ம்...அப்புறம்...?

மன்னன் - பார சீக நாட்டினைப்
படை யெடுத்து வென்றபின்
சீர்மி கும்நல் இந்தியா
தேசம் அதையும் வெல்லுவேன்.

வேதாந்தி - அதற்குப் பிறகு...?

மன்னன் - இன்னும் இந்த உலகிலே
இருக்கும் நாடு யாவையும்
வென்று நானும் மகிழுவேன்;
வெற்றி முழக்கம் செய்குவேன்.

வேதாந்தி - அதற்கு அப்பால்...?

மன்னன் - சொந்த நாடு திரும்புவேன்;
தோட்டம் ஒன்றின் நடுவிலே.
சின்ன வீடு கட்டுவேன்;
திருப்தி யாக வாழுவேன்.

வேதாந்தி - சொந்த நாட்டில் சிறியதாய்த்
தோட்டம், வீடு அமைக்கவே
இந்த உலகம் முழுவதும்
ஏனோ வேண்டு மென்கிறாய்?

சின்ன வீடு கட்டியே
திருப்தி யோடு வாழவே,
இன்றே வேலை தொடங்குவாய்.
இன்பம் விரைவில் காணுவாய்!

காவல்காரர்



சட்டை மேலே கோட்டு மாட்டிச்
சரிகை போட்ட வேட்டி கட்டி,
நட்ட நடுவே தோட்டம் தன்னில்
ராஜா போலே நின்றி ருந்தார்.

இரவும் பகலும் தூங்கி டாமல்
இங்கு மங்கும் நகர்ந்தி டாமல்
பெருமை யோடு காவல் காப்பார்
பெயரில் லாத காவல் காரர்.

காக்கை குருவி அங்கே வந்தால்,
காவல் காரர் நிற்கக் கண்டு
சீக்கி ரத்தில் வந்த வழியே
திரும்பி ஓடும் பயந்து கொண்டு.

காற்று பலமாய் அடித்த தாலே,
கனத்த மழையும் பெய்த தாலே,
நேர்த்தி யான அவரின் உடைகள்
நித்தம் கிழிந்து வந்த தையோ!

காவல் காரர் உடைகள் யாவும்
கந்தல் கந்தல் ஆன தாலே,
பாவம், பிச்சைக் காரர் போலப்
பார்க்கும் போதே தோன்ற லானார்!

இதனைக் கண்ட காகம் ஒன்று,
"இந்தச் சமயம் இவர்க்கு நாமும்
உதவி செய்தால் பயமில் லாமல்
உலவ லாமே" என்று கருதி;

அருகில் உள்ள வீட்டிற் குள்ளே
யாரும் இல்லா வேளை சென்று
கறுப்புக் கோட்டு, சிவப்புச் சட்டை,
கட்டிக் கொள்ளச் சரிகை வேட்டி

எடுத்து வந்து காவல் காரர்
இருக்கும் இடத்தில் போட்டு விட்டே,
"உடுத்திக் கொள்வீர்" என்று சொல்லி
ஒதுங்கி நின்று பார்த்த தங்கே.

காவல் காரர் பழைய உடையைக்
கழற்றிக் கீழே போட வில்லை;
ஆவ லோடு புதிய உடையை
அணிய வில்லை; அசைய வில்லை!

உடனே காகம் அருகில் சென்றே
　　உற்று நன்றாய்ப் பார்த்த பின்னர்,
"அடடே! இந்தக் காவல் காரர்
　　யாரோ என்று நினைத்தி ருந்தேன்.

வைக்கோல் மேலே துணியைச் சுற்றி
　　வைத்தி ருக்கும் பொம்மை என்றே
இக்க ணத்தே நண்பர் அறிய
　　எடுத்துச் சொல்வேன்" என்று கூறி,

காவல் காக்கும் பொம்மை தலையில்
　　காலை வைத்து நின்று கொண்டு,
கூவி அழைத்துப் பறவை யாவும்
　　கூடச் செய்து விட்ட தங்கே!





ஜெயிலில் நேரு இருந்தபோது
நடந்த நிகழ்ச்சியைத்
தெரியும் வகையில் உங்க ளுக்குக்.
கூறப் போகிறேன்;
வெயிலின் கொடுமை தாங்கி டாமல்
தேளில் ஒன்றுமே
மெல்ல அவரின் அறையி னுள்ளே
வந்து சேர்ந்ததாம்!

கண்ட வுடனே நேரு பதற்றம்
கொள்ள வில்லையாம்!
கல்லைத் தூக்கி மேலே போட்டுக்
கொல்ல வில்லையாம்!
"என்ன செய்தார்!" என்று தானே
நீங்கள் கேட்கிறீர்?
எடுத்துச் சொல்வேன்; பொறுமை யோடு
கேளும், நண்பரே.

சுருக்குப் போட்டுக் கயிற்றி னாலே
கொடுக்கில் கட்டினர்;
தூக்கிச் சுவரில் தேளைக் கட்டித்
தொங்க விட்டனர்;
அருகில் நின்று சிரித்த படியே
அதனைப் பார்த்தனர்.
அந்தப் பார்வைக் குள்ளே யுள்ள
அர்த்தம் என்னவோ?

தொங்கு கின்ற தேளைக் கண்டே
அங்கு வந்திடும்
சொந்தக் காரத் தேள்கள் ஓடி
ஒளியு மென்றுதான்
அங்கு ஜவஹர் தேளைக் கட்டித்
தொங்க விட்டனர்.
ஆனால், அதுவும் எந்த விதமோ
தப்பி விட்டதாம்!

அங்கும் மிங்கும் ஜவஹர் தேளைத்
தேடிப் பார்த்தனர்.
அறையில் அதனைக் கண்டு பிடிக்க
முடிய வில்லையாம்.

'இங்கே யிருந்தால் கயிற்றில் மீண்டும்
தொங்க வேண்டுமே!'
என்ற பயந்து கொண்டே தேளும்
ஓடி விட்டதோ!





தேசத் தலைவர், பெரியோர்கள்,
சினிமா நடிகர் படங்களெலாம்

வீடுகள், கடைகள் யாவிலுமே
விளங்கக் கண்டார் ஒருமனிதர்.

செல்வம் மிகுந்தவர் ஆதலினால்,
சீமான் என்றே அழைத்திடுவோம்.

'நமது படமும் இப்படியே
நாட்டில் எங்கணும் விளங்கிடவே

வேண்டும்' என்றே அச்சீமான்
விரும்பி யோசனை செய்தனரே,

'பற்பல நிறத்தில் தம்படத்தைப்
பளபளப் பான தாள்களிலே

அச்சிட வேண்டும் அழகாக.
அப்புறம் அந்தப் படங்களையே,

அளித்திட வேண்டும் இலவசமாய்.
அனைவரும் விரும்பிப் பெற்றிடுவார்.

இலவச மாகக் கொடுக்கையிலே
எவர்தாம் வேண்டாம் என்றிடுவார்?'

இப்படி அவரும் எண்ணினரே.
இதற்குள் வேறொரு சந்தேகம்.

'படத்தைச் சும்மா வைத்துவிடின்
பாழாய்ப் போகும், ஆகையினால்,

அவற்றிற் கெல்லாம் கண்ணாடி
அழகாய்ப் போட்டே நம்செலவில்

கடைகளுக் கெல்லாம் கொடுத்திடலாம்
கருத்தாய் மாட்டி வைத்திடுவார்',

என்றே அவரும் எண்ணினரே;
ஏற்பா டுகளும் செய்தனரே.

திசைகள் தோறும் ஆள்அனுப்பி,
தெருவில் உள்ள கடைகளுக்குப்

படங்கள் கொடுக்கச் செய்தனரே;
பணத்தை நீர்போல் இறைத்தனரே.

சென்றன இரண்டு நாட்களுமே.
சீமான் நிலைமை அறிந்திடவே,

வெளியில் கிளம்பிச் சென்றனரே;
வீதிகள் எங்கும் சுற்றினரே;

ஒவ்வொரு கடையாய்ப் பார்த்தனரே.
ஒன்றிலும் இல்லை அவர்படமே!

எல்லாக் கடையிலும் தேடினரே.
எங்கும் மேற்படி மேற்படியே!

எப்படிப் போயின படங்களெலாம்?
என்றே அவரும் எண்ணுகையில்,

அருகில் ஓர்கடை முதலாளி,
அவரது நண்பர் ஒருவரிடம்

கூறிய வார்த்தைகள் அவர்காதில்
கூரிய வேல்போல் பாய்ந்தனவே:

"ஊர்பெயர் தெரியா ஒருவனது
உருவப் படத்தை ஒருமடையன்

கண்ணா டியுடன் என்னிடத்தே
கடையில் மாட்டத் தந்திருந்தான்.

உள்ளே இருந்த அவன்படத்தை
உடனே நன்றாய்க் கிழித்தெறிந்தேன்.

அதற்குப் பதிலாய் என்படத்தை
அழகாய் ஒட்டி வைத்துள்ளேன்.

இங்கே பாராய்!” என்றவனும்
எடுத்துக் காட்டினன் ஒருபடத்தை.

கேட்டனர் சீமான் அவ்வுரையை.
‘கிர்ர்’ ரெனத் தலையும் சுற்றியதே!

“அந்தோ, இதுபோல் என்படங்கள்
அனைத்தும் நாசம் ஆயினவோ?

எத்தனை ஆயிரம் செலவழித்தேன்!
எல்லாம் வீண்வீண்!” என்றனரே.

எட்டய புரத்து மன்னருடன்
இனிதாய்க் காலம் கழித்திடவே,
பட்டணம் சென்றனர் பாரதியார்,
பலநாள் சென்று திரும்பினரே.

வாசலில் குதிரை வண்டியுமே
வந்து நின்றதைக் கண்டதுமே,
ஆசையாய் வாசலை நோக்கிவந்தார்
அவரது மனைவி செல்லம்மா.

வண்டியை விட்டே பாரதியார்
மகிழ்வுடன் கீழே இறங்கிவந்தார்.
வண்டியி லிருந்த பொட்டணங்கள்
வந்தன பாரதி பின்தொடர்ந்தே!

'பட்டுப் புடவை, பாத்திரங்கள்,
பற்பல நல்ல பொருள்களுமே
பொட்டணத் துள்ளே இருக்கு'மெனப்
பிரித்துமே பார்த்தனர் செல்லம்மா.

பட்டுப் புடவையும் அங்குஇல்லை;
பாத்திர பண்டமும் அங்குஇல்லை;
பொட்டணத் துள்ளே இருந்ததெல்லாம்
புத்தகம், புத்தகம், புத்தகமே!

அரசர் கொடுத்தது ஐந்துநூறு.
அத்தொகை யாவுமே புத்தகமாய்
இருப்ப தறிந்ததும், "ஐயையோ,
ஏனோ இப்படிச் செய்துவிட்டீர்!

எனக்குப் பிடித்ததாய் ஏதுமில்லை,
இப்படிக் காசைக் கெடுப்பதுவோ?"
சினத்துடன் மனைவி பேசிடவே,
சிரித்துமே பாரதி கூறினரே:

"பட்டுப் புடவை, வெள்ளியிலே
பாத்திரம், பண்டங்கள் வாங்காமல்,
பட்டணம் சென்றே வீணாகப்
பணத்தைக் கெடுத்ததாய் எண்ணுகிறாய்.

அழிகின்ற செல்வம் நான்கொடுத்தே
அழியாத செல்வம் கொண்டுவந்தேன்.
அழகழ கான கருத்தையெல்லாம்
ஆனந்த மாகப் படித்தறிவோம்."

தேர் கொடுத்தவர்



முத்து, பவளம், மணி இழைத்த
தேரைப் பாரடி - அதில்
மிடுக்குடனே செல்லும் அந்த
மனிதர் யாரடி?
எத்தி சையும் புகழ் மணக்கும்
பாரி தானடி - அவர்
இல்லை யென்றே சொல்லி டாத
வள்ள லாமடி.

சாலை ஓரம் அந்தத் தேரும்
நிற்ப தேனடி? - அங்கே
சட்டென் றவரும் கீழி றங்கிப்
பார்ப்ப தென்னடி?
மாலைக் காற்றில் ஆடி அசையும்
முல்லைக் கொடியடி - அதை
வழியில் கண்டே வேக மாக
இறங்கி னாரடி.

உற்றே அந்தக் கொடியை அவரும்
பார்ப்ப தேனடி? - அவர்
உள்ளம் நொந்து முகமும் வாடி
நிற்ப தேனடி?

பற்றிப் படரக் கொம்பில் லாமல்
முல்லைக் கொடியுமே - காற்றில்
சுற்றிச் சுழன்று தவிக்கும் காட்சி
கண்டு தானடி.

தேரைக் கொடியின் அருகில் கொண்டு
செல்வ தேனடி? - அங்கே
சென்று கொடியைக் கையில் அவரும்
எடுப்ப தேனடி?

தேரின் மீது கொடியைப் படர
விடுகி றாரடி - அதன்
சிரமம் தீர்த்து மகிழ்ச்சி யோடு
நடக்கி றாரடி.

முல்லை படரத் தேரைக் கொடுத்த
வள்ளல் பாரிபோல் - அடியே,
மிகவும் நல்ல மனிதர் ஒருவர்
உண்டோ? சொல்லடி.

இல்லை, இல்லை. இல்லை என்றே
சொல்கி றேனடி - நாம்
எங்கு தேடிப் பார்த்திட் டாலும்
கிடைத்தி டாரடி!





அறிஞர் ஒருவர் வீட்டைக் கட்டி
அடக்க மாக வாழ்ந்தனர்.
'சிறிய வீடு' என்றே அதனைத்
தெருவில் சென்றோர் கூறினர்.

அந்த அறிஞர் தம்மைத் தேடி
அன்று ஒருவர் வந்தனர்.
வந்த மனிதர், "இந்த வீடு
வாழ்வ தற்கே ஏற்றதோ?

முகப்பு சிறிதும் அழகா யில்லை.
முற்றம் குறுகி யுள்ளது.
சிகப்பு வர்ணம் அடித்தி ருந்தால்
சிறப்பே" என்றார். அத்துடன்,

"நண்பர் பலரும் கூடி வந்தால்
நன்க மர்ந்து பேசவே,
சின்னஞ் சிறிய இந்த அறையில்
சிறிதும் வசதி யில்லையே!"

என்றே அவரும் சொன்ன வுடனே
இதனைக் கேட்ட அறிஞரும்,
புன்சி ரிப்பு சிரித்துக் கொண்டே
புகன்றார் அங்கே அவரிடம்.

“சின்ன அறையை நிரப்பும் அளவில்
சிறந்த நண்பர் கிடைத்திடின்,
இன்பம் அடைவேன். ஆனால், அவர்கள்
எங்கே கிடைக்கப் போகிறார்!”



இயற்கை அழகினைக் கண்டுகண்டு - பெரும்
இன்ப மடைந்திடும் ஓர்அரசன்
உயர்ந்த மலைகளைக் கண்டிடவே - மிக
உல்லாச மாகக் கிளம்பினனே.

மலைவளம் கண்டு வருகையிலே - அங்கு
மடமட வென்று மழைபொழிய
பலகிளை உள்ள மரத்தடியில் - சென்று
பதுங்கினன் அந்த அரசனுமே.

பயத்தால் உடலும் நடுங்குதல்போல் - குளிர்
பரவிட மன்னன் நடுங்கினனே.
உயர்ந்த மதிப்புள்ள போர்வையினால் - நன்றாய்
உடம்பை இறுகவே மூடினனே.

மேகங்கள் கூடிடக் கண்டதுமே - அங்கு
வேகமாய் ஓர்மயில் ஓடிவந்தே,
தோகை விரித்துநின் றாடியதே - மேலும்
தொண்டையைத் தூக்கி அகவியதே!

"ஐயோ, குளிர்மிக வீசுவதால் - இந்த
ஆண்மயில் மேனி நடுங்குதம்மா!
'ஐயா, உதவுங்கள்' என்கிறதோ - மயில்?
ஆமாம், அதைத்தான் உரைக்கிறது."

எண்ணினன் இப்படி மன்னனுமே - உடன்
எடுத்தனன் போர்த்திய போர்வையினை.
சென்றனன் அந்த மயிலருகே - உள்ளம்
திருப்தி அடைந்திடப் போர்த்தினனே.

உடலும் மழையால் குளிர்ந்திடவே - அவன்
உள்ளம் கொடையால் குளிர்ந்ததுவே.
கொடையில் சிறந்தோன் பெயர்சொல்லவா?
- மக்கள்
கொண்டாடும் பேகன் அவனல்லவா!



பேகன் கடையேழு வள்ளல்களில் ஒருவர். பழனி மலையையும் அதையடுத்த ஊர்களையும் ஆண்டு வந்தவர்.

குதிரை கொடுத்தது!

“கையி லுள்ள ரேகை தன்னைக்
கவன மாகப் பார்த்துமே,
ஐய மின்றிக் குறிகள் சொல்வார்
அடுத்த ஊரில் வந்துளார்.”

என்றே ஒருவர் சொல்லக் கேட்டே
எழுந்து வேணு என்பவர்,
சென்றே அந்த மனிதர் தம்மைத்
தேடிப் பிடித்துக் கூறினார்:

“விரைவில் பணத்தைச் சேர்க்க நானும்
விரும்பு கின்றேன், ஆதலால்
குறுக்கு வழிகள் ஏதும் உண்டோ?
குறிகள் பார்த்துக் கூறுவீர்.”

கையைப் பிடித்துப் பார்த்து விட்டு,
“கணக்காய் நானும் கூறுவேன்.
ஐயா, குதிரை யாலே நீங்கள்
அடைவீர் செல்வம், நிச்சயம்.”

என்று கூற அதனைக் கேட்டே
இன்பம் கொண்ட வேணுவும்,
அன்றே குதிரைப் பந்த யத்தில்
ஆவ லாகக் கலந்தனர்.

குதிரைப் பந்த யத்தில் அவரும்
கொஞ்சங் கொஞ்ச மாகவே,
அதிகப் பணத்தை இழந்து மிகவும்
அல்லற் பட்டுத் திரும்பினார்.

திரும்பி அவரும் வந்த போது
திடுதிப் பென்று வேகமாய்,
அருகில் வந்த குதிரை வண்டி
அவரின் மீது மோதவே.

வலது கையும் முறிந்த தையோ!
வைத்தி யர்கள் பார்த்துமே,
பலனே இல்லை; ஆத லாலே
பாவம், நொண்டி யாயினார்!

"கஷ்டம் மிகவும் பட்டேன், இந்தக்
கையொ டிந்த தால்" என
நஷ்ட ஈடு கோரி ரூபாய்
நான்கு நூறு பெற்றனர்.

குறிகள் சொன்ன மனிதர் மீது
    குற்றம் உண்டோ? சொல்லுவீர்.
சிறிதும் இல்லை. குதிரை யாலே
    செல்வம் வந்த தல்லவா!



"என்றன் படத்தைப் பெரிதாக
எழுதித் தந்திட வேண்டு"மெனச்
சொன்னார் கனவான் ஒருவருமே,
சித்திரம் வரையும் நிபுணரிடம்.

பத்தே நாளில் அவர்உருவப்
படத்தை எழுதித் தந்திடவே
ஒத்துக் கொண்டார் ஓவியரும்.
உடனே, வேலை தொடங்கினரே.

தவணை சொன்ன நாள்தனிலே
தமது நாயுடன் கனவானும்
அவரது படத்தைப் பார்த்திடவே
ஆவல் பெருகச் சென்றனரே.

எழுதிய படத்தை ஓவியரும்
எடுத்துக் காட்டினர் அவரிடத்தே.
அழகாய் அப்படம் அமைந்திருந்தும்,
அந்தக் கனவான் குறைசொன்னார்:

"இந்தப் படத்தில் என்உருவம்
இயல்பா யில்லை. அதனால்தான்
என்றன் நாயும் அதனருகில்,
இதுவரை செல்லா திருக்கிறது."

என்றனர் மிகவும் சலிப்புடனே.
ஏன்இதைக் கூறினர், அறிவீரோ?
அன்னவர் கூலியைக் குறைத்திடவே
அப்படி ஒருபொய் உரைத்தனராம்!

"நன்றாய்த் திருத்தித் தருகின்றேன்.
நாளை மாலையில் வந்திடுவீர்"
என்றார் அந்த ஓவியரும்
ஏதோ மனத்தில் நினைத்தபடி.

மறுநாள் ரொட்டித் துண்டொன்றை
வாங்கி வந்தார் ஓவியரும்.
உருவப் படத்தில் தடவினரே
ஒருவரும் காணா வகைதனிலே.

மாலையில் ஓவியர் வீட்டிற்கு
வந்தார் கனவான். வந்ததுமே,
வாலினை ஆட்டி அவர்படத்தை
மகிழ்வுடன் நாயும் நக்கியதே!

படத்தில் ரொட்டியின் மணமிருந்தால்
பார்த்துக் கொண்டா நாய்நிற்கும்?
உடனே ஓவியர் கனவானை
உற்றுப் பார்த்தார் சிரித்தபடி.

"எப்படி உருவம் இருக்கிறது?
இயல்பாய் இதுவும் இல்லையெனில்
அப்படி நாயும் நக்கிடுமோ?
அசலாய் உங்கள் உருவம்தான்!"

என்றே ஓவியர் கூறியதும்,
ஏதும் கூற வழியின்றி,
முன்னர் ஒப்புக் கொண்டபணம்
முழுதும் கொடுத்தார் அக்கனவான்!

வேடிக்கைப் பாடல்கள்

முறுக்கு, முறுக்கு, முறுக்கு,
வாயிலே போட்டு நொறுக்கு.

அர்க்கு, அரக்கு, அரக்கு,
தீயிலே காட்டி உருக்கு.

சரக்கு, சரக்கு, சரக்கு,
கப்பலை விட்டே இறக்கு.

எருக்கு, எருக்கு, எருக்கு,
எருக்கஞ் செடியை நறுக்கு!

கொம்புள்ள மிருகங்காள்!
　　கூடி ஓடி வாருங்கள்.
கொம்பு எனக்கு இல்லையே,
　　குத்திக் கீழே தள்ளவே!

வாலுள்ள மிருகங்காள்.
　　வந்தே என்னைப் பாருங்கள்,
வால் எனக்கு இல்லையே,
　　வளைத்து நீட்டி ஆட்டவே!

இறகுடைய பறவைகாள்!
　　இங்கே என்னைப் பாருங்கள்.
இறகு எனக்கு இல்லையே,
　　இஷ்டம் போலப் பறக்கவே!

மூக்குள்ள பறவைகாள்!
　　முன்னே வந்து பாருங்கள்
மூக்கு எனக்கு நீளமாய்,
　　முகத்தில் இல்லை கொத்தவே!

நேரு தந்த யானை



டில்லிக்குப் போனேன்,
நேருவைப் பார்த்தேன்,
'சல்யூட்' செய்தேன்.
சாக்லேட் தந்தார்.

'என்னடா கண்ணு
ஏதடா வேணும்?
சொன்னால் தருவேன்.
சொல்வாய்' என்றார்.

'அன்புள்ள மாமா,
அவசியம் வேணும்,
சின்னதாய் யானை
சீக்கிரம் தருவீர்'

என்றேன். காகிதம்
எடுத்தார் உடனே.
என்னவோ அதிலே
எழுதிக் கொடுத்தார்.

பார்த்தேன் அதையே.
படத்தில் யானை!
பார்த்தேன் அவரை.
பக்கெனச் சிரித்தார்.

'யானைநீ கேட்டாய்.
அன்புடன் தந்தேன்.
தீனியே வேண்டாம்.
செலவுமே இல்லை.

அடக்கமா யிருக்கும்.
அங்குசம் வேண்டாம்.
மடித்துநீ பைக்குள்
வைத்திடு' என்றார்.

ஜோர் ஜோர் யானை!
ஷோக்கான யானை!
யார்தான் தருவார்
இதுபோல் யானை?

தலைவர் தந்தார்
தங்கக் கையால்,
விலைக்கா வேண்டும்?
விற்கவே மாட்டேன்!



விநோத விடைகள்

மிருக ராஜன் தலையில் ரோமம்
அடர்ந்தி ருப்பதேன்? - காட்டில்
வெட்டி விடவே எந்த ஆளும்
இல்லை யாதலால்!

ஒட்டைச் சிவிங்கிக் கழுத்து மிகவும்
நெட்டை யானதேன்? - அது
எட்டி எட்டி இலையும் தழையும்
பறித்துத் தின்றதால்!

வரிக் குதிரையின் உடம்பு முழுதும்
கோடி ருப்பதேன்?- யாரோ
வலிக்க வலிக்கச் சவுக்கி னாலே
அடித்த காயம்தான்!

அண்டங் காக்கை அதிக மாகக்
கறுத்துப் போனதேன்? - அது
அடுப்புக் கரியைத் திருட்டுத் தனமாய்
எடுத்துத் தின்றதால்!

கிளியின் மூக்கு குங்கு மம்போல்
சிவந்தி ருப்பதேன்? - யாரோ
கெட்ட பையன் கையைக் கொத்தி
ரத்தம் பட்டதால்!

ஆந்தை பக்காத் திருடன் போலே
விழித்துப் பார்ப்பதேன்? - அதே
அரச பார்வை என்று நினைத்துக்
கொண்ட தாலேதான்!



மாப்பிள்ளையும் பெண்ணும்

என்ன மாப்பிள்ளை? - இவர்
என்ன மாப்பிள்ளை?

கையில் கடி காரமில்லை,
கடுக்கன் போட்ட காதுமில்லை.
பையில் ஒரு காசுமில்லை.
பவுண்டன் பேனாக் கூடஇல்லை. (என்ன)

சரிகை வேட்டி கட்டவில்லை.
சவ்வாதுப் பொட்டுமில்லை;
செருப்புக் கூடப் போடவில்லை.
சிரித்துப் பேசத் தெரியவில்லை. (என்ன)

பள்ளிக் கூடம் போன தில்லை.
படித்துப் பட்டம் பெற்றதில்லை.
மெள்ளக் கூட நடப்பதில்லை.
வேலை எதுவும் செய்வதில்லை.

என்ன மாப்பிள்ளை? - இவர்
என்ன மாப்பிள்ளை?

என்ன பெண்ணடி? - இவள்
என்ன பெண்ணடி?

பட்டுச் சேலை கட்டவில்லை.
பவுடர் கூடப் பூசவில்லை.
ஒட்டி யாணம் அணியவில்லை.
ஒருந கையும் போடவில்லை. (என்ன)

சடையில் பூவும் வைக்கவில்லை.
தலையைக் குனிந்து கொள்ளவில்லை.
நடனம் ஆடத் தெரியவில்லை.
நலுங்குப் பாட்டும் புரியவில்லை. (என்ன)

தையல் வேலை பழகவில்லை.
சமையல் வேலை தெரியவில்லை.
கையைக் காலை அசைப்பதில்லை.
கண்ணை மூடித் திறப்பதில்லை.

என்ன பெண்ணடி? - இவள்
என்ன பெண்ணடி?

ஃ ஃ ஃ

குறையேது சொன்னாலும்
குற்றங்கள் கண்டாலும்
மரப்பாச்சி மணமக்கள்.
வாய்பேச மாட்டாரே!

இருபது பேர்கள்

இருபது பேரைக் கத்தியினால்
இரக்கம் இன்றி வெட்டினேன்நான்.
ஒருவரும் செத்துப் போகவில்லை.
ஒருதுளி ரத்தமும் சிந்தவில்லை.

‘குய்யோ, முறையோ’ என்றவர்கள்
கூக்குரல் கூடப் போடவில்லை.
பொய்யே இல்லை; சொன்னதெலாம்
மெய்தான், மெய்தான் மெய்யேதான்.

பத்துப் பேர்கள் கைகளிலே;
பத்துப் பேர்கள் கால்களிலே;
மொத்தம் இருபது பேர்களடா!
வெட்டப் பட்டவை நகங்களடா!

சக்கரம் இல்லா வண்டியிலே
தலையில்லாத ஒருமனிதன்,

காலில் லாத மாடுகளைக்
கட்டி விட்டான் ஹைஹைஹை!

கொம்பை வெட்டி அதனாலே
குடலை வெளியில் எடுத்திடவே,

சந்தோ ஷத்துடன் மாடுகளும்
தாவித் சென்றன ஜாம்ஜாம்ஜாம்!

கடலைக் கடந்து வண்டியுடன்
கால்மணி நேரம் ஆவதற்குள்,

அக்கரை சேர்ந்தான். இக்கதையை
அவசியம் நம்புவீர், தோழர்களே!

தா தா தா தா தா தா தா தா தா தாக்குத்
தண்ணீர் தாரான்

ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆக்கும்
உதவான்; கொள்ளை

லா லா லா லா லா லா லா லா லா லாக்குப்
பொருளை விற்பான்

பா பா பா பா பா பா பா பா பா பாக்கே
ஆளாவானே!

மேலே இருப்பது ஒரு பாட்டு. ஆம், உண்மையிலே இது ஒரு பாட்டுத்தான்! 'என்ன, பாட்டா? அப்படியானால், உங்கள் வாயில் ஏதேனும் கோளாறோ?' என்றுதானே கேலி செய்கிறீர்கள்? உங்களுக்குப் பாடத் தெரியாவிட்டால் கேலி எதற்கு?

சரி. ஒன்று, இரண்டு என்று எண்ணவாவது உங்களுக்குத் தெரியுமா? அப்படியானால், மேலே சேர்ந்தாற்போல் எத்தனை தடவை 'தா' என்ற எழுத்து வந்திருக்கிறது?

பத்து தடவைகள்.

'தா' வில் பத்து இருப்பதால், அதை தாபத்து என்று படிக்க வேண்டியதுதானே! அதேபோல 'ஆ' வில் பத்து; 'லா' வில் பத்து' 'பா' வில் பத்து; சேர்த்துப் படித்தால் -

தாபத்துக்குத் தண்ணீர் தாரான்.
ஆபத்துக்கும் உதவான்; கொள்ளை
லாபத்துக்குப் பொருளை விற்பான்
பாபத்துக்கே ஆளாவானே!

என்று பாட வந்துவிடுகிறது. பூ, இவ்வளவுதானே!



தொப்பென்று வீழ்ந்தான்!

தெருவில் நடந்து சென்றான்
சின்னச் சாமி என்பான்.

வாழைப் பழத்தைத் தின்றான்;
வழியில் தோலை எறிந்தான்;

மேலும் நடந்து சென்றான்;
விரைந்து திரும்பி வந்தான்;

தோலில் காலை வைத்தான்.
தொப்பென் றங்கே வீழ்ந்தான்!

வெடிகள் வெடிக்கும் சத்தம் கேட்டு
விரைந்து நானும், நண்பரே
குடுகு டென்றே அறைக்குள் ஓடிக்
குந்தப் போனேன் மூலையில்.

இருட்டு அறையில் பதுங்கி யிருந்த
திருட்டுப் பூனை மீதிலே
குருட்டுத் தனமாய்க் காலை வைத்தேன்.
குப்பென் றதுவும் பாய்ந்தது!

குப்பென் றதுவும் பாய்ந்து வெளியில்
குதித்தே ஓட, அதிர்ச்சியில்
தொப்பென் றங்கே தரையில் வீழ்ந்தேன்.
தொல்லை மேலும் தொடர்ந்தது.

அச்சம் கொண்டு வீழ்ந்த சமயம்
அடியேன் கைகள் பட்டதால்,
பட்ச ணங்கள் இருந்த தகரம்
படப டென்று சரிந்தது!

சத்தம் கேட்ட வுடனே அம்மா
தாவி ஓடி வந்தனள்.
'மொத்து மொத்து' என்றே எனது
முதுகில் நான்கு வைத்தனள்.

'எத்தித் திருடித் தின்னத் தானே
இங்கு வந்தாய்?' என்றவள்
சத்தம் போட்டுக் கொண்டே முதுகில்
தாளம் போட லாயினள்.

'பட்பட்' வெடிகள் சத்தம் கேட்டுப்
பயந்தே ஓடி ஒளிந்தநான்
'பட்பட்' டென்று முதுகில் விழவே
'பாட்டு'ப் பாடத் தொடங்கினேன்!



(கன்றுக்குப் பால் விடாமல் கறக்கும் பட்டணத்துப் பால்காரர் ஒருவரைப் பார்த்து ஒரு சிறுவன் பாடுகிறான்).

காலை மாலை வேளையிலே பால்காரரே - தினம்
கன்றில் லாமல் பால்க றக்கும் பால்காரரே.
பாலை யெல்லாம் கறந்துவிட்டுப் பால்காரரே - அதைப்
பத்து மடங் காக்கி விற்கும் பால்காரரே.

சொட்டுப் பாலும் விட்டிடாது பால்காரரே - கன்றைத்
துடிது டிக்கச் செய்து விட்டீர், பால்காரரே.
ஒட்டி உலர்ந்து கன்றுசாக, பால்காரரே - நீரோ
உரலைப் போலப் பருக்கிறீரே பால்காரரே!

துள்ளி ஓடும் கன்றைக் கொன்று பால்காரரே - அதன்
தோலி னாலே கன்று செய்தீர் பால்காரரே!
கொள்ளை லாபம் அடிப்பதற்கோ பால்காரரே - இந்தக்
கொடிய செயல் செய்துவிட்டீர் பால்காரரே?

கொன்று விட்டீர் அருமைக் கன்றை, பால்காரரே - இன்னும்
கொஞ்சம் கூட இரக்க மில்லை பால்காரரே.
கன்றில்லாத பசுவை ஏய்த்துப் பால்காரரே - நித்தம்
கறந்து கறந்து விற்கிறீரே பால்காரரே!

ஒருமுழ மூக்கு

ஒருவன் மூக்கு
ஒருமுழ நீளம்.

அருகில் போனால்
ஆளைக் குத்தும்,

தெருவில் நடந்தே
செல்லும் சமயம்,

‘அருகில் வந்தால்
ஆபத்’ தென்றே

அறிவித் திடவே
அவனும் நினைத்தான்.

கண்டா மணியைக்
கயிற்றில் கட்டி

நன்றாய் மூக்கின்
நடுவில் மாட்டி

‘டண்டாண் டண்’ என
நடக்கும் போதே

அண்டையில் வருவோர்
அறியச் செய்தான்!

குழந்தைக் கவிஞரின் படைப்பும் பணியும்

பிறப்பு : புதுக்கோட்டை மாவட்டம், இராயவரம், 7-11-1922.

மறைவு : 16-3-1989

பெற்றோர் : அழகப்பச் செட்டியார், உமையாள் ஆச்சி.

கவிதை எழுதத் தொடங்கியது : 13 - வது வயதில்.

சக்தியில் பணி : 1940-ல் அமரர் வை. கோவிந்தன் அவர்களின் சக்தி அலுவலகத்தில் பொருளாளராய்ச் சேர்ந்தார். சக்தி இதழின் ஆசிரியர் தி. ஜ. ர. அவர்களின் ஆதரவால் சக்தியில் எழுதி, எழுத்தாளரானார்.

இந்தியன் பாங்க் பணி : 1941 - ல் இந்தியன் பாங்கில் சேர்ந்து, சென்னையிலுள்ள ஆள்வார்ப்பேட்டை, ஆயிரம் விளக்கு, ஹாரிஸ் ரோடு, காரைக்குடி ஆகிய கிளைகளில் மேலாளராகப் பணியாற்றிய பின், காரைக்குடியில் வட்டார மேலாளராகப் (Area Manager) பணியாற்றி 1982 நவம்பரில் ஓய்வு பெற்றார்.

புத்தகங்கள் : இதுவரை குழந்தைகளுக்காக 50 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

அரசினர் பரிசுகள் : மத்திய அரசின் பரிசு பெற்றவை :

(1) மலரும் உள்ளம் (முதல் தொகுதி)
(2) பாட்டிலே காந்தி கதை

தமிழக அரசின் பரிசு பெற்றவை :

(1) மலரும் உள்ளம் (முதல் தொகுதி)
(2) பாப்பாவுக்குப் பாட்டு
(3) நல்ல நண்பர்கள் (கதை)
(4) பெரியோர் வாழ்விலே
(5) சின்னஞ் சிறுவயதில்
(6) பிள்ளைப் பருவத்திலே

குழந்தை எழுத்தாளர் சங்க நிறுவனர் : 1950-ல் குழந்தைகளுக்காக எழுதுவோரை ஒன்ற சேர்த்து, குழந்தை எழுத்தாளர் சங்கத்தை வை. கோவிந்தன் அவர்கள் தலைமையில் நிறுவினார். தமிழில் குழந்தை இலக்கியம் தழைக்கவும், எழுத்தாளர் பலர் உருவாகவும்

துணைநிற்கும் இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் (1950-55) தலைவர் (1956-61) ஆலோசகர் (1961-67), மீண்டும் தலைவர்.

தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் : 1956-ல் ‘ஆனந்த விகடன்’ தேவன் அவர்கள் தலைவராயிருந்தபோது பொதுச் செயலாளரானார். 3 ஆண்டுகள் செயலாளராகவும், பிறகு துணைத் தலைவராகவும் இருந்து 1966-ல் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு : 1979 அக்டோபரில் ‘கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளைச் சொற்பொழி’வாக ‘வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்’ என்ற தலைப்பில் 3 நாட்கள் பேசினார். இப்பேச்சு பின்னர் புத்தகமாக வெளி வந்துள்ளது.

தென் மொழிப் புத்தக டிரஸ்டில் பணி : ஃபோர்ட் ஃபுண்டேஷன் நிறுவிய தென்மொழிப் புத்தக டிரஸ்டின் குழந்தைப் புத்தக அலுவலராக 5½ ஆண்டுகள் (1957-62) பணிபுரிந்து தென் மொழிகள் நான்கிலும் பல சிறந்த நூல்கள் வெளிவந்து பரிசுகளும் பாராட்டுகளும் பெற உதவினார்.

பாராட்டு :

1961-ல் நடந்த மூன்றாவது குழந்தை இலக்கிய மாநாட்டில், டாக்டர் ஜாகீர் ஹுசைன் அவர்கள் கேடயம் வழங்கிக் கௌரவித்தார். 1963-ம் லக்னோவில் நடந்த அனைத்திந்திய குழந்தை எழுத்தாளர் மாநாட்டில் ‘தமிழில் குழந்தை இலக்கிய முன்னோடி’ என்ற பாராட்டும் பதக்கமும் வழங்கப் பெற்றன. கிண்டி ராஜ்பவனில் நடந்த குழந்தை எழுத்தாளர் சங்க வெள்ளி விழாவில் (18-4-77) அச்சங்கத்தை நிறுவியவர் என்ற முறையிலும், சங்கத் தலைவர் என்ற முறையிலும் குடியரசுத் தலைவர் ஃபக்ருதீன் அலி அகமத் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கேடயம் வழங்கிச் சிறப்பித்தார். 1975-ல் தமிழ்க் கவிஞர் மன்றம் நடத்திய முதல் மாநாட்டில் கேடயம் வழங்கப் பெற்றது.

கவிமணி, ராஜாஜி, கல்கி, டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, டாக்டர் மு. வ., நாமக்கல் கவிஞர், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, ஐயன் பெருமாள் கோனார், தி. ஜ. ர., கொத்தமங்கலம் சுப்பு, டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் ஆகியோரது பேரன்பையும் பாராட்டையும் பெற்றவர்.

சிறப்புப் பட்டங்கள் :

பிள்ளைக் கவியரசு : குழந்தைக் கவிஞர் என அன்போடு அழைக்கப்பெறும் இவரது பொன் விழாவையொட்டி பாரதி இளைஞர் சங்கச் சார்பில் 1972-ல் ‘பிள்ளைக் கவியரசு’ என்ற சிறப்புப் பட்டம் பொறித்த கேடயத்தை நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் வழங்கினார்.

மழலைக் கவிச் செம்மல் : 1979 ல் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு விழாக் குழு (காரைக்குடி) இவரது குழந்தை இலக்கியத் தொண்டினைப் பாராட்டிக் கேடயம் வழங்கியது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் பொன்னாடை போர்த்த, கவியரசு முடியரசனார் ‘மழலைக் கவிச் செம்மல்’ எனும் பட்டத்தை வழங்கினார்.

தமிழ்ப் பேரவைச் செம்மல் : வாழ்நாள் முழுவதும் குழந்தை இலக்கிய வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்டு பல நூல்கள் படைத்தும், பல வழிகளில் தொண்டாற்றியும் வருகின்ற முன்னோடி என மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 9-1-82ல் சிறப்பாக ஒருவிழா எடுத்துப் பாராட்டியது. தமிழப் பேரவைச் செம்மல் எனும் பட்டத்தையும் ரூ. 5000/- மதிப்புள்ள பொற்பதக்கத்தையும் வழங்கியதோடு, பொன்னாடை போர்த்தியும் சிறப்பித்தது.

குழந்தை இலக்கியப் பணிக்கு வெள்ளி விழா : இவர் 25 ஆண்டுகளாக ஆற்றிவரும் குழந்தை இலக்கியப் பணியைப் பாராட்ட வள்ளல் திரு. ஏ. வி. மெய்யப்பன் அவர்கள் தலைமையில் அமைக்கப் பெற்ற குழு, வெள்ளி விழாவை 22-11-70 ல் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள் தலைமையில் பல அரிய கட்டுரைகள் அடங்கிய மலரை, சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மா. அனந்தநாராயணன் அவர்கள் வெளியிட்டார். திரு. கொத்தமங்கலம் சுப்பு தலைமையில் இவரைப் பற்றி 25 கவிஞர்கள் பாடி அரங்கேற்றிய கவிதைகளை, பாரதி பாலர் கலையரங்கம் வெளியிட்டது. பாரதியார், கவிமணி, வள்ளியப்பா ஆகியோரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய ‘சிறுவருக்கு - கவிதை தந்தவர் கதை’ என்று புலவர் திரு. அ. அப்துல் கரீம் எழுதிய நூலை, நாமக்கல் கவிஞர் வெளியிட்டார். (இந்நூல் பின்னர் தமிழக அரசின் பரிசு பெற்றது).

பொன் விழா : 1972 ல் வானொலிச் சிறுவர் சங்கப் பேரவைத் தலைவர் புலவர் தணிகை உலகநாதன் அவர்கள் தலைமையில் பல

சிறுவர் சங்கங்கள் சேர்ந்து மாணவர் மன்றத்தில் நடத்திய விழாவில், கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியர் திரு துரன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார். 'வள்ளியப்பா பாட்டு'ப் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு வெள்ளிப் பதக்கங்களும், புத்தகங்களும் பரிசுகளாக வழங்கப் பெற்றன.

மணிவிழா : இவரது மணிவிழாவைப் பல ஊர்களில், பல சங்கங்கள் நடத்தினர். காரைக்குடியில் அமைக்கப் பெற்ற மணிவிழாக் குழுவினர், 60 கவிஞர்கள் குழந்தைகளுக்காக எழுதி, கவிஞர் செல்ல கணபதி, ரா. பொன்ராசன் இருவரும் தொகுத்து பழனியப்பா பிரதர்ஸ் தயாரித்த 'அன்புக் குழந்தைக்கு அறுபது பாடல்கள்' என்ற நூலை வெளியிட்டதோடு, குழந்தைகளின் சிறப்புக் கலை நிகழ்ச்சியைக் கம்பன் மணிமண்டபத்தில் நடத்தி, கவிஞரின் 'ஏடு தூக்கிப் பள்ளியில்...' என்று தொடங்கும் பாடல் அடங்கிய செப்பேட்டினை 300 பள்ளிகளுக்கு வழங்கினர். கவிஞர் பிறந்த இராயவரத்தில் உள்ள அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயிலில் கவிஞர் எழுதிய துதிப்பாடல் அடங்கிய கல்வெட்டினையும் திறந்து வைக்க ஏற்பாடு செய்தனர்.

மொழி பெயர்ப்பு : 'நம் நதிகள்' என்னும் தென்னாட்டு ஆறுகள் பற்றிய இவரது நூலை தேசிய மொழிப் புத்தக டிரஸ்ட் 14 இந்திய மொழிகளில் வெளியிட்டுள்ளது. தெலுங்கில் இவரது பாடல் தொகுப்பு ஒன்றும், பல பாடல்கள் ஆங்கிலத்திலும், சில நூல்கள் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்மொழிகளிலும் வெளிவந்துள்ளன.

பாடநூல்கள், வானொலி, தொலைக்காட்சி : 1000க்கு மேற்பட்ட குழந்தைப் பாடல்கள் இயற்றியிருக்கிறார். தமிழ் நாட்டுப் பாட நூல்களில் மட்டுமன்றி, கேரளம், கர்நாடகம், இலங்கை, தென் ஆப்பிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், மொரீஷியஸ் போன்ற நாடுகளில் வெளியான நூல்களிலும், இவரது பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சென்னை, இலங்கை, சிங்கப்பூர் வானொலிகளிலும், சென்னை தொலைக் காட்சியிலும் இவரது பாடல்களும், நாடகங்களும் இடம் பெறுகின்றன.

வகித்த பதவிகள் : மதுரை காமராசர் பல்கலைக் கழகக் கல்விக் குழுவில் (Academic Council) ஆயுள் உறுப்பினராக, பல்கலைக் கழக வேந்தர் (தமிழ்நாடு கவர்னர்) நியமித்தார். தலைவர், குழந்தை எழுத்தாளர் சங்கம், சென்னை; தலைவர், குழந்தை இலக்கியச் சங்கம், காரைக்குடி; உறுப்பினர், சென்னை தொலைக்காட்சி நிலைய ஆலோசனைக் குழு,

சிறுவர் கலைக் களஞ்சிய ஆலோசனைக் குழு, பாரதியார் சங்கச் செயற்குழு.

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா அறக்கட்டளை என்ற பெயரில் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு விழாக் குழு (காரைக்குடி) ஓர் அறக்கட்டளையை 1980-ல் நிறுவி, காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி நிறுவனர் திரு. இராம. பெரியகருப்பன் அவர்களிடம் ஒப்படைத்துள்ளது. இதன் மூலம், ஆண்டுதோறும் குழந்தைகளுக்கான பாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன.

இவரது நூல்களில் ஆராய்ச்சிப் பட்டங்கள் : இவரது கவிதைகளை ஆய்வு செய்து மதுரைப் பல்கலைக்கழக எம்.ஃபில் பட்டம் பெற்றவர்கள்; திருவாளர்கள் வெ. கிருட்டினசாமி, கதி. கணேசன், கேரளப் பல்கலைக் கழக எம்.ஃபில் பட்டம் பெற்றவர்; திருமதி ஓ. பத்மகுமாரி. சென்னைப் பல்கலைக் கழக Ph.D. பட்டம் பெற இருப்பவர் : திருமதி அம்புஜம். திரு. வெ. கிருட்டினசாமியின் ஆய்வு நூல் 'குழந்தைக் கவிஞரின் கவித் திறன்' என்ற பெயரிலும், திரு. கதி. கணேசனின் ஆய்வு நூல் 'குழந்தை இலக்கியத்தில் வள்ளியப்பா ஒரு வழிகாட்டி' என்ற பெயரிலும் வெளிவந்துள்ளன.

வாழ்க்கை வரலாறு : 'குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா வரலாறு' எனும் 304 பக்கங்கள் கொண்ட நூல் டாக்டர் பூவண்ணனால் எழுதப் பெற்று, வானதி பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

அறிஞர்களின் வாழ்த்தும் கருத்தும்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை :

பள்ளிச் சிறுவர் சிறுமியர்கள்
பாடிப் பாடி மகிழ்வெய்த
தெள்ளத் தெளித்த செந்தமிழில்
தேனார் கவிகள் செய்துதரும்
வள்ளியப்பா ....

நாமக்கல் கவிஞர் :

இனியபொருள் எளியபதம் இணைந்த வாகி
இளைஞர்களின் மனங்கவரும் கவிகள் பாடி
தனிமுறையில் தமிழ்த்தாய்க்குப் பெருமை கூட்டித்
தகுதிமிக்கோர் புகழ்ந்தபல சான்று பெற்றோன்

கொத்தமங்கலம் சுப்பு :

வள்ளியப் பாவின் பாமாலை - அது
வளரும் தமிழுக்குப் பூமாலை
அள்ளிக் குடிக்கும் நீரோடை - அது
அழகுத் தமிழுக்குப் பொன்னாடை

சௌந்தரா கைலாசம் :

வையமே வியக்கும் வண்ணம்
வள்ளியப் பா! உன் நெஞ்சுள்
தெய்வமே குழந்தை யாகித்
திருவிளை யாடல் ஒன்று
செய்வமே என்று மெள்ளச்
சேர்ந்ததோ. சிறுவர்க் காகப்
பெய்வமே பாடல் என்று
பெய்ததோ! உண்மை பேசு!

ராஜாஜி :

(மலரும் உள்ளம் இந்திய அரசினர் பரிசு பெற்றபோது) வேறு யாரும் செய்யாத பணி, அந்தப் பணிக்குச் சரியாய் அமைந்தவர், செய்து

மேலிடத்துப் பாராட்டுப் பெற்றது வியப்பும் மகிழ்ச்சியும். மேன்மேலும் தமிழ்க் குழந்தைகளுக்காக வள்ளியப்பா உழைப்பாராக! அந்த உழைப்புக்குத் தரவேண்டிய ஊக்கத்தை அனைவரும் தருவோமாக!

சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை :

இனிய தமிழ்ப் பாடல்களால் உள்ளத்தை அள்ளும் கவித்திறம் வாய்ந்தவர் திரு. வள்ளியப்பா. பிஞ்சு மனத்திற்கு உகந்த செஞ்சொற் கவிஞர் அவர்.

தி. ஜ. ர. :

குழந்தை இலக்கிய வளர்ச்சிக்காக ஒரு பெரிய இயக்கத்தையே தோற்றுவித்தவர்; இன்றைய பல குழந்தை எழுத்தாளர்களெல்லாம் தங்களுக்கு வழிகாட்டியாகக் கொண்டு போற்றப் பெறுபவர்.

பெ. தூரன் :

தொடர்ந்து குழந்தை இலக்கியம் படைத்துக் கொண்டிருப்பதோடு, குழந்தை இலக்கியத்திற்கே அதற்குரிய உயர்நிலையை நிறுவுவதிலும் அவர் யாரும் செய்யாத அளவிற்குப் பணியாற்றியிருக்கிறார்.

அகிலன் :

வள்ளியப்பா, எப்படியோ குழந்தையாகவே மாறிப் போய், அதே சமயம் அறிவூட்டும் ஆசிரியராகவும் இருந்து இந்த அற்புதத்தைச் செய்துகொண்டு வருகிறார்.

புலவர் தணிகை உலகநாதன் :

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நாடறிந்த ஒரு பூஞ்சோலை. ஆயிரம் ஆயிரமான மழலைச் செல்வங்களின் மனக்கோயிலில் என்றும் நீங்கா இடம் கொண்ட தலைசிறந்த குழந்தை எழுத்தாளர். அவர்தம் குழந்தைக் கவிதைகள் இலக்கியச் சோலையில் என்றும் வாடா நறுமலர்கள். குழந்தை இலக்கிய உலகில் அவர் ஒரு விடிவெள்ளி.

பூவண்ணன் :

பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை போல நாட்டில் 'குழந்தைக் கவிஞர் பரம்பரை' ஒன்றும் உருவாகி வருகிறது. இன்று குழந்தைப் பாடல்கள் எழுதும் பலரும் இந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

Kamil Veith Zvelebil :

Kavimani Tecikavinayakam Pillai (1876-26.9.1954) was one of the first Tamil authors to write Poetry for Children. These verses belong to his best and he paved way for the most important poet in Tamil, Ala Valliappa.

Ala Valliappa is well known as the children's poet (Kulantaik - Kavignar). His poems are not only for children, but also about children. Composed in a very simple sweet language and full of gentle pathos, teaching the good traditional values.

(A History of Indian Literature)

Somaley :

Wherever Tamil is spoken and wherever Tamil children live, Al. Valliappa's name is a household name. Valliappa's greatness lies in the fact that he has given his whole life-time to writing for children. And he continues to do so. He has founded and built up the children's writers' Association. He has stimulated writing for children by encouraging many of his own readers to write.

Artur Isenberg *(Ford Foundation)* :

The greatest contribution of the Southern Languages Book Trust has undoubtedly been in the vital field of children's books. This, I have always believed and shall go on believing, was above all due to the fact that the Trust was fortunate to have the services of **Mr. Al. Valliappa**, an inspired, dedicated and competent writer and administrator.

நாடு விடுதலை பெற்றதன் பின்
நம்தமிழ் நாட்டில் பிறந்தவரே,
ஏடு பயிலும் சிறுவர்களே,
இனிய நல் வாழ்வினைப் பெற்றிடுவீர்.
— குழந்தைக் கவிஞர்